விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka






# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 27
ஒலி 021 வள்ளுவர் ஆண்டு 2056 மார்கழி 25 வெள்ளிக்கிழமை (09.01.2026) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

## யாழ்ப்பாணம், வவுனியா உட்பட 7 மாவட்டங்களுக்கு வெள்ள அபாயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், வவுனியா உட்பட 7 மாவட்டங்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அதன்படி யாழ்ப்பாணம், வவுனியா, அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை, பொலநறுவை, அநுராதபுரம் ஆகிய மாவட்டங்களுக்கு நீர்ப்பாசனத் திணைக்களத்தால் அவசர வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சியாகப் பெய்து வரும் கனமழை காரணமாக ஆறுகள் மற்றும் குளங்களின் நீர்மட்டம் வேகமாக உயர்ந்து வருவதால், வடக்கு, கிழக்கு மற்றும் வடமத்திய

15ஆம் பக்கம் பார்க்க

## மக்கள் பீதியடைய வேண்டாம்
## 100 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சியே யாழுக்கு கிடைக்கப் பெறும்



### மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவு

(யாழ்ப்பாணம்)


பொதுமக்கள் பீதியடைய வேண்டாம். யாழ்.மாவட்டத்துக்கு 100 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சியே கிடைக்கக்கூடிய சந்தர்ப்பம் காணப்படுவதாக யாழ்.மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவின் பிரதிப் பணிப்பாளர்

02ஆம் பக்கம் பார்க்க

## - வலுப்பெற்றது -
# ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம்
## அவதானமாக இருக்குமாறு எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

வங்காள விரிகுடாவில் நிலை கொண்டுள்ள காற்றழுத்த தாழ்வு மண்டலம் வலுப்பெற்றுள்ளது. எனவே பொது மக்கள் அவதானமாக இருக்குமாறு யாழ்.பல்கலைக்கழக புவியியற்துறை பேராசிரியர் பிரதீப ராஜா எச்சரித்துள்ளார். (04ஆம் பக்கம் பார்க்க)



## 21 பவுண் நகை கரவெட்டியில் கொள்ளை

(கரணவாய்)

வடமராட்சி கரவெட்டிப் பகுதியில் 21 பவுண் நகை கொள்ளையிடப்பட்டுள்ளதாக நெல்லியடிப் பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது.

இச்சம்பவம் கடந்த புதன்கிழமை நள்ளிரவு இடம்பெற்றுள்ளது.

வீட்டில் இருந்தவர்

15ஆம் பக்கம் பார்க்க

## இடைநிறுத்தப்பட்ட உயர்தரப் பரீட்சை
### 12ஆம் திகதி மீள ஆரம்பம்

(கொழும்பு)

நாட்டில் ஏற்பட்ட பேரிடர் காரணமாக இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்த கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையின் எஞ்சிய பாடங்களுக்கான பரீட்சைகள்,

15ஆம் பக்கம் பார்க்க

### கச்சதீவு அந்தோனியார் ஆலய
## வருடாந்த திருவிழா தொடர்பான முன்னாயத்த கலந்துரையாடல்



15ஆம் பக்கம் பார்க்க

## கடற்படையினரின் கட்டுப்பாட்டிலுள்ள முள்ளிக்குளம் கிராமம் விடுவிக்கப்படும்
### ஜனாதிபதி அநுர உறுதி

(மன்னார்)

மன்னாரில் கடற்படையின் கட்டுப்பாட்டிலுள்ள முள்ளிக்குளம் கிராமத்தை விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க உறுதியளித்துள்ளார்.

பாராளுமன்றக் கட்டடத் தொகுதியில் நேற்று முன்தினம்

04ஆம் பக்கம் பார்க்க



## 'கந்தரோடை விகாரை' என நாட்டப்பட்டிருந்த பெயர்ப் பலகை அகற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம்-வலிகாமம் தெற்கு பிரதேச சபையினால், கந்தரோடை பகுதியில் விகாரைகள் அமைந்துள்ளதாகக் கூறப்படும் பகுதிகள் "கந்தரோடை தொல்லியல் ஆய்வு மையம்" என அடையாளப்படுத்தப்பட்டதையடுத்து, "கந்தரோடை விகாரை" என நாட்டப்பட்டிருந்த பெயர்ப் பலகை அகற்றப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம்-காங்கேசன்துறை வீதியில், சுன்னாகம் சந்தைக்கு அருகில், தனியார் காப்புறுதி நிறுவனம்

15ஆம் பக்கம் பார்க்க

## கண்டியில் நிலநடுக்கம்

(கண்டி)

கண்டி - உடுதும்பர-தேவஹந்திய பகுதியில் நேற்று மாலை 5.05 மணியளவில் நிலநடுக்கம் பதிவாகியுள்ளது.

இந்த நிலநடுக்கமானது ரிக்டர் அளவுகோலில் 2.2

15ஆம் பக்கம் பார்க்க

## கல்வி முறையை மேம்படுத்துவதில் அரசாங்கம் உறுதி பூண்டுள்ளது
### மகாநாயக்கர்களிடம் பிரதமர் ஹரிணி



04ஆம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறாது ஒலிக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 100 மில்லி...

ரி.என். சூரியராஜா தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட செயலகத்தில் நேற்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையில், வங்களா விரிகுடாவின் தென் கிழக்கு பகுதியில் ஏற்பட்ட தாழமுக்கம் காரணமாக யாழ்ப்பாண மாவட்டத்தில் சீரற்ற காலநிலை தொடர்ச்சியாக காணப்படுகிறது.

யாழ் மாவட்டத்திற்குரிய தீவக கடல் போக்குவரத்துகளும் இன்றிலிருந்து (நேற்று) மறு அறிவித்தல் வரை நிறுத் தப்பட்டுள்ளது. மீனவர்களை கடற் றொழிலுக்கு செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

வளிமண்டலவியல் திணைக்களத்தின் அறிக்கையின் பிரகாரம் யாழ் மாவட்டத்திற்கு ஒன்பதாம் பத்தாம் திகதிகளில் கூடுதலான மழை வீழ்ச்சி அதாவது, 100 மில்லி மீற்றர் அளவில் கிடைப்பதற்கான அறிகுறி காணப்படுகிறது.

யாழ். மாவட்ட அரச அதிபரின் தலைமையில் கீழ் அனைவரையும் உள்ளடக்கி அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான கூட்டம் ஒன்று நடத்தப்பட்டது.

இதன்போது அரச அதிபரினால் சகல பிரதேச செயலர்களுக்கும் தேவையான அறிவுறுத்தல் வழங்கப்பட்டதுடன் குறிப்பாக சகல கிராம மட்ட அலுவலர்களுக்கும் பிரதேச செயலாளர்களுக்கும் அனர்த்த நிலைமைகள் தொடர்பான அறிவித்தல்கள் வழங்கப்பட்டது.

வளிமண்டலவியல் திணைக்களத்தினால் பகிரப்படும் தகவல்கள் உடனடியாகவே எமது பங்குதாரர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. சகல கிராமமட்ட உத்தியோகத்தர்களுக்கும் இது சம்பந்தமாக அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருப்பதால் மக்கள் தேவையற்ற விதத்தில் பீதியடைய தேவையில்லை - என்றார். *(ம-7)*


# கேள்வி அறிவித்தல்
## யாழ்ப்பாண வலயக்கல்வி அலுவலகம்

யாழ்ப்பாண வலயக்கல்வி அலுவலகத்தில் இயங்கும் சிற்றுண்டிச்சாலை மற்றும் அலுவலக வாகனங்களுக்கான வாகன சுத்திகரிப்பிற்காக 01.02.2026 - 31.01.2027 வரையான காலப் பகுதிக்கு ஒப்பந்த அடிப்படையில் வழங்குவதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| இல. | விபரம் | சிற்றுண்டிச்சாலை | வாகன சுத்திகரிப்புச் சேவை |
|---|---|---|---|
| 01 | படிவக் கட்டணம் | ரூபா 1,000.00 | ரூபா 500.00 |
| 02 | கேள்வி வைப்பு (மீளளிப்பு) | ரூபா 10,000.00 | ரூபா 10,000.00 |
| 03 | படிவ விநியோகம் | 09.01.2026 - 22.01.2026 திகதிவரை | 09.01.2026 - 22.01.2026 திகதிவரை |
| 04 | விண்ணப்பம் ஏற்பு | 23.01.2026 - மு.ப 10.00 வரை | 23.01.2026 - மு.ப 10.00 வரை |
| 05 | விண்ணப்பம் திறத்தல் | 23.01.2026 மு.ப 10.00 | 23.01.2026 மு.ப 10.00 |

விண்ணப்பத்தை அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்வதோடு மேலதிக விபரங்களையும் பெற்றுக்கொள்ளலாம். தொடர்புக்கு (தொலைபேசி இல 0212222647)

**வலயக்கல்விப் பணிப்பாளர்,**
**யாழ்ப்பாண வலயக்கல்வி அலுவலகம்**

(C-4781)



# வேலையாட்கள் தேவை

கொழும்பிலுள்ள அலுமினிய Fitting வேலைத் தளத்திற்கு அனுபவமுள்ள வேலையாட்கள் தேவை.

- Casement Windows
- 100mm Sliding Door
- Kitchen Cupboards

சுயமாக செய்யக்கூடியவர்கள் தொடர்பு கொள்ளவும்.
வேலையில் ஒழுக்கமும் ஒழுங்கும் தேவை.

**மாதச் சம்பளம் :- 90,000 /=**

**0777 809 614**

(C-385)





# நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் வழிபடுநர் பேரவையின் விசேட பொதுக்கூட்டம்

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலய வழிபடுநர் சபையின் விசேட பொதுச்சபைக்கூட்டம் 11.01.2026 இல் நடாத்த திட்டமிடப் பட்டிருந்தது. மேற்படி பொதுச்சபைக் கூட்டம் தவிர்க்க முடியாத காரணங்களினாலும் எமது சக்திக்கு அப்பாற்பட்ட காரணிகளாலும் திட்டமிட்டபடி 11.01.2026 இல் நடாத்த முடியாத சூழ்நிலையொன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதன் காரணமாக கூட்டம் தவிர்க்க முடியாத காரணிகளால் பிற்போடப்பட்டுள்ளது.குறித்த காரணகாரியங்கள் தொடர்பான விளக்கம் பின்னர் அறியத்தரப்படும். கூட்டம் தொடர்பான திகதி விரைவில் அறிவிக்கப்படும்.

நன்றி

**செயலாளர்**
**அறங்காவலர் சபை**
**நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்**
**நயினாதீவு.**

(C-4780)



# சைவ வித்தியா விருத்திச் சங்கம்
## ஆசிரியர் பணி வெற்றிடம்

எமது பராமரிப்பில் இயங்கும் சிறுவர் இல்லங்களில் (உரும்பிராய் மற்றும் திருநெல்வேலி) சிறார்களுக்கு பிரத்தியேக வகுப்புக்கள் நடாத்துவதற்கு பின்வரும் பாடங்களுக்குத் தகுதி வாய்ந்த ஆசிரியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. ஆங்கிலம் தரம் 6-13 வரை
02. பொது உளச் சார்பு - க.பொ.த (உயர்தரம்)
03. புலமைப்பரிசில் - தரம் 05
04. தையல்
05. சிங்களம்

விண்ணப்பங்கள் 20.01.2026 இற்கு முன்பாக நேரிலோ அல்லது தபாலிலோ எதிர்பார்க்கப்படுகின்றன.

**சைவ வித்தியா விருத்திச் சங்கம்**
**கலாசாலை வீதி. திருநெல்வேலி**
**தொலைபேசி - 021 222 6525, 076 300 4877** **செயலாளர்**

(C-4779)





# எனது 35 ஆண்டுகள் ஆன்மீகப் போராட்டப் பாதையிலே...

## இன்று (09.01.2026)

### சுழிபுரம் பறாளாய் ஈசுர விநாயகர் தேவஸ்தானத்தில்

### வரும் பேரிடரிலிருந்து மக்களைக் காக்க விஷேட பூஜை வழிபாடுகள்

**அன்பு உள்ளங்களே!**

வங்காள விரிகுடாவில் தற்போது உருவாகியுள்ள காற்றழுத்தம் காரணமாக யாழ்ப்பாணம் இதுவரை இல்லாத வகையில் பெரும் அழிவை சந்திக்க வாய்ப்புக்கள் உள்ளதாகவும் டித்வா புயலை விட மோசமானதாக காணப்படும் என்றும் வானிலை ஆய்வாளர்கள் எதிர்வுகூறியுள்ளனர்.

எனவே சர்வவல்லமை பொருந்திய ஈசுர விநாயகரின் திருவருள் வேண்டி வரும் பேரிடரிலிருந்து மக்களைக் காக்க விஷேட அபிஷேகம் பூஜைகள், வழிபாடுகள், பிரார்த்தனைகள் நடைபெறும் என்பதனை அறியத்தருகின்றேன்.

**காலம்:- (09.01.2026) இன்று வெள்ளிக்கிழமை**
**நேரம்:- காலை 07.30 மணி**

**குறிப்பு:** அடியேனுக்கு ஈசுர விநாயகர் டித்வா புயலுக்கு முன்னதாக ஒரு வெள்ளக்காட்டையே முதலில் காட்டி பின்னர் ஆலயத்தைக் காட்டினார். அப்படியே யாவும் நடந்தாயிற்று. தற்போது கடந்த நாட்களில் மழையுடன் கூடிய காலநிலையை காட்டினாரே தவிர வேறு எதுவும் காட்டி அருளவில்லை என்பதை அனைத்து மக்களுக்கும் அறியத்தருகிறேன். ஈசுர விநாயகரை நினையுங்கள். வணங்குங்கள். யாவும் அவன் செயலே!. அவர் திருப்பாதம் போற்றி போற்றி...

**சோழியபுரம், சுழிபுரம்.**
**08.01.2026**

**சோழியூரான் பிறைசூடிக்குரு**
**(ஆன்மீகவாதியும் சந்ததிப் பூசகரும் பரம்பரைப் பரிபாலகரும்)**

(6523)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்களை அநுர அரசு ஏமாற்றாது!



**(கொழும்பு) --------------------------------**

**தமிழ் மக்களின் நீண்ட கால அரசியல் பிரச்சினைகளுக்கு நிரந்தரமான தீர்வை வழங்குவதில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசு உறுதியுடன் செயற்படும் என்று வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"கடந்த காலங்களில் பல அரசுகள் தமிழ் மக்களுக்கு வாக்குறுதிகள் வழங்கிய போதிலும், அவை நடைமுறைப் படுத்தப்படவில்லை. அந்தத் தவறுகளை மீண்டும் செய்யாமல், உண்மையான மற்றும் நீடித்த அரசியல் தீர்வை வழங்குவதற்காக தற்போதைய அரசு பொறுப்புடன் செயற்படும்.

தமிழ் மக்களின் அரசியல் உரிமைகள், சமத்துவம், பாதுகாப்பு மற்றும் அதிகாரப் பகிர்வு போன்ற அடிப்படை விடயங்கள் தொடர்பில் விரிவான கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்படும். அனைத்து இன மக்களையும் உள்ளடக்கிய ஒற்றுமையான நாட்டை கட்டியெழுப்புவதே இந்த அரசின் நோக்கமாகும்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது நாட்டின் உள்நாட்டு விடயமாக இருந்தாலும், சர்வதேச சமூகத்திடம் இலங்கை அரசு வெளிப்படையாகவும் பொறுப்புடனும் செயற்படுவதாக நம்பிக்கை அளிக்க வேண்டிய தேவையும் உள்ளது.

தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகள் மதிக்கப்பட வேண்டும். அவர்களது நம்பிக்கையை மீட்டெடுப்பதே இந்த அரசின் முதன்மையான இலக்கு. அதற்காக அரசியல் ரீதியான நிரந்தர தீர்வு வழங்கப்படும் என்று உறுதியளிக்கின்றோம். வாக்குறுதி மட்டும் அல்ல, அதை நடைமுறையில் நிறைவேற்றும் அரசாக இந்த அரசு செயற்படும்" என அவர் தெரிவித்தார். (நி)

## லிட்ரோ விலையில் மாற்றமில்லை

(கொழும்பு)

2026 ஆம் ஆண்டின் ஜனவரி மாதத்திற்கான லிட்ரோ எரிவாயு விலையில் எந்தவித திருத்தமும் மேற்கொள்ளப்பட மாட்டாது என லிட்ரோ எரிவாயு நிறுவனம் தெரிவித்துள்ளது.

கடந்த நவம்பர் மாதமும் லிட்ரோ எரிவாயு விலையில் எந்தவித திருத்தமும் மேற்கொள்ளப்படவில்லை.

நாட்டின் நிலைமையை கருத்தில் கொண்டு இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக லிட்ரோ எரிவாயு நிறுவனம் தெரிவித்துள்ளது.

அதன்படி, 12.5 கிலோ கிராம் நிறையுடைய எரிவாயு சிலிண்டரின் விலை 3,690 ரூபாவாகவும், 5 கிலோ கிராம் நிறையுடைய எரிவாயு சிலிண்டரின் விலை 1,482 ரூபாவாகவும், 2.3 கிலோ கிராம் நிறையுடைய எரிவாயு சிலிண்டரின் விலை 694 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படும் என லிட்ரோ எரிவாயு நிறுவனம் தெரிவித்துள்ளது. (நி)

## நடப்பாண்டில் பொருளாதாரம் மேலும் வளர்ச்சியடையும்

### மத்திய வங்கி ஆளுநர் நம்பிக்கை



(கொழும்பு)

இந்த ஆண்டில் நாட்டின் பொருளாதாரம் சுமார் 4 முதல் 5 வீதம் வரை வளர்ச்சியடையும் என எதிர்பார்க்கப்படுவதாக இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

கடந்த இரண்டு வருடங்களாக இலங்கைப் பொருளாதாரத்தில் காணப்பட்ட வளர்ச்சி வேகத்தைத் தொடர்ந்து தக்கவைத்துக்கொண்டு, 2026 ஆம் ஆண்டில் நாட்டின் பொருளாதாரம் சுமார் 4 முதல் 5 வீதம் வரை வளர்ச்சியடையும் என எதிர்பார்க்கப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட பொருளாதார சீர்திருத்தங்கள் மற்றும் ஸ்திரப்படுத்தல் நடவடிக்கைகளின் பயனாகப் பொருளாதாரத்தில் ஏற்பட்டுள்ள நேர்மறையான மாற்றங்கள் தொடரும் எனவும், அதன் விளைவாக இந்த வருடம் குறிப்பிடத்தக்க பொருளாதார வளர்ச்சியை எட்ட முடியும் எனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (நி)

## அதிவேகம் உயிரைப் பறித்தது

(கொழும்பு)

கோர விபத்தில் சிக்கி 11 வயது சிறுவன் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தத் துயரச் சம்பவம் குருநாகல், கல்கமுவை பிரதேசத்தில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றுள்ளது.

மேற்படி சிறுவன் சைக்கிளில் வீதியைக் கடக்க முயன்றபோது அதிவேகமாக வந்த கார் அவர் மீது மோதியுள்ளது.

விபத்தில் படுகாயமடைந்த சிறுவன் உடனே கல்கமுவை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போதும் முதலிலே உயிரிழந்து விட்டார் என்று வைத்தியர்கள் தெரிவித்தனர்.

சம்பவ இடத்துக்கு விரைந்து விசாரணையை முன்னெடுத்த பொலிஸார் காரின் சாரதியான 27 வயது இளைஞரைக் கைது செய்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (நி)

## அடையாள அட்டை உள்ளிட்ட ஆவணங்களை இழந்த பரீட்சார்த்திகளுக்கு விசேட சலுகை

### பரீட்சை ஆணையாளர் நாயகம் அறிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் நிலவும் சீரற்ற வானிலை மற்றும் பேரிடர் காரணமாகத் தமது தேசிய அடையாள அட்டை அல்லது ஏனைய அடையாள ஆவணங்களை இழந்த மாணவர்கள், எஞ்சிய உயர்தரப் பாடங்களுக்குத் தோற்றுவதற்கு விசேட நடைமுறை ஒன்றைப் பரீட்சைத் திணைக்களம் அறிமுகப்படுத்தியுள்ளது.

தேசிய அடையாள அட்டை இல்லாத மாணவர்கள், அதற்குப் பதிலாக தபால் அடையாள அட்டை அளவுள்ள, உறுதிப்படுத்தப்பட்ட இரண்டு புகைப் படங்களைச் சமர்ப்பித்து பரீட்சைக்குத் தோற்ற முடியும் என பரீட்சை ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

பரீட்சார்த்திகள் தேசிய அடையாள அட்டை, செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம் அல்லது கடவுச்சீட்டு ஆகியவற்றில் ஒன்றினைச் சமர்ப்பிக்க வேண்டும். அனர்த்தங்கள் காரணமாக இவற்றை இழந்த மாணவர்கள் பின்வரும் நடைமுறையைப் பின்பற்றலாம்.

பாடசாலை விண்ணப்பதாரிகள்: அதிபரால் சான்றளிக்கப்பட்ட மற்றும் வலயக் கல்விப் பணிப்பாளரால் உறுதிப்படுத்தப்பட்ட இரண்டு புகைப்படங்களுடன் கூடிய தற்காலிக அடையாள அட்டையை பயன்படுத்தலாம்.

தனிப்பட்ட விண்ணப்பதாரிகள்: கிராம உத்தியோகத்தர் மற்றும் பிரதேச செயலாளரால் உறுதிப்படுத்தப்பட்ட புகைப்படங்களுடன் கூடிய தற்காலிக அடையாள அட்டையைச் சமர்ப்பிக்கலாம்.

அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள மாணவர்கள், பாடசாலைச் சீருடை இல்லாவிட்டாலும் கூட, தமக்குத் தகுந்த பொருத்தமான ஆடைகளை அணிந்து பரீட்சைக்குத் தோற்ற முடியும்.

சீரற்ற காலநிலை அல்லது வெள்ளம் காரணமாகத் தமது குறிப்பிட்ட பரீட்சை நிலையத்திற்குச் செல்ல முடியாத மாணவர்கள், உடனடியாகத் தமது பாடசாலை அதிபர், வலயக் கல்விப் பணிப்பாளர் அல்லது பரீட்சைத் திணைக்களத்தைத் தொடர்பு கொண்டு, தமக்கு அருகிலுள்ள பாதுகாப்பான பரீட்சை நிலையத்தில் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான வசதிகளைப் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் தெரிவித்துள்ளார். (நி)

## சிகரெட் பயன்பாட்டால் வருடாந்தம் 22,000 உயிரிழப்புகள்

### போதைப் பொருள் தகவல் மையம் தெரிவிப்பு

(கொழும்பு)

புகையிலை மற்றும் சிகரெட் பாவனை காரணமாக இலங்கையில் வருடாந்தம் சுமார் 22 ஆயிரம் உயிரிழப்புகள் பதிவாகுவதாக மது மற்றும் போதைப்பொருள் தகவல் மையம் தெரிவித்துள்ளது.

நாட்டில் ஏற்படும் அனைத்து இறப்புகளில் 83 சதவீதமானவை தொற்று அல்லாத நோய்களால் ஏற்படுகின்றது.

இந்த இறப்புகளில் செல்வாக்கு செலுத்தும் நான்கு பிரதான காரணிகளில் புகையிலை பயன்பாடும் ஒன்றாகும்.

இலங்கையில் சுமார் 1.5 மில்லியன் பெரியவர்கள் புகைப்பிடிக்கும் பழக்கத்திற்கு அடிமையாகியுள்ளனர்.

அதேநேரம், உலகளவில் ஒவ்வொரு ஆறு வினாடிக்கும் புகையிலை பயன்பாடு காரணமாக ஒரு இறப்பு பதிவாகுவதாக புகையிலை மற்றும் மது பானம் தொடர்பான தேசிய அதிகார சபையின் தலைவர் வைத்தியர் ஆனந்த ரத்நாயக்க குறிப்பிட்டார். (நி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6 விக்கெட்டுகளால் இலங்கையை வீழ்த்தி

# ரி-20 தொடரில் பாகிஸ்தான் முன்னிலை

**ரி - 20 போட்டியில் பாகிஸ்தான் அணி இலங்கை அணியை ஆறு விக்கெட் வித்தியாசத்தில் தோற் கடித்தது.**



129 என்ற இலகுவான இலக் கினை துரத்திய பாகிஸ்தான் அணி யானது 16.4 ஓவர்களில் நான்கு விக்கெட்டுகளை மாத்திரம் இழந்து வெற்றியை பதிவு செய்தது.

இந்த வெற்றியுடன் மூன்று போட்டிகள் கொண்ட ரி-20 கிரிக்கெட் சல்மான் அஹா தலைமையிலான பாகிஸ்தான் அணி 1:0 என்ற கணக் கில் முன்னிலைப் பெற்றது.

தம்புள்ளை ரங்கிரி மைதானத் தில் நேற்று முன்தினம் 7 மணிக்கு ஆரம்பமான இப்போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற பாகிஸ் தான் அணியானது முதலில் துடுப் பெடுத்தாடும் வாய்ப்பினை இலங் கைக்கு வழங்கியது.

அதன்படி, துடுப்பெடுத்தாடிய தசுன் ஷானக்க தலைமையிலான அணியானது, 19.2 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 128 ஓட்டங்களுக்குள் சுருண்டது. இலங்கை அணி சார்பில் ஜனித் லியனகே மாத்திரம் அதிகப் படியாக 31 பந்துகளில் 40 ஓட்டங் களை எடுத்தார்.

ஏனைய வீரர்கள் சொல்லும் அளவுக்கு பிரகாசிக்கவில்லை.

பந்து வீச்சில் பாகிஸ்தான் சார்பில் சல்மான் மிர்சா மற்றும் அப்ரார் அஹமட் ஆகியோர் தலா 3 விக்கெட் டுகளையும், மொஹமட் வசிம் மற் றும் ஷதாப் கான் ஆகி யோர் தலா 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர். 129 எடுத்தால் வெற்றி என்ற இலக்கினை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணிக்கு ஆரம்ப வீரர்களான சாஹிப்சாதா ஃபர்ஹான் (51) மற்றும் சைம் அயூப் (24) ஆகி யோர் நல்லதொரு இணைப் பாட்டத்தை வழங்கினர். இதனால், பாகிஸ்தான் அணி 5 ஓவர்களில் 50 ஓட்டங் களை கடந்தது.

அத்துடன் இறுதியாக 16.4 ஓவர் களில் 4 விக்கெட்டுகளை இழந்து 129 ஓட்டங்களை எடுத்து வெற்றி பெற்றது. உஸ்மான் கான் 7 ஓட்டத்து டனும் ஷதாப் கான் 18 ஓட்டத்துடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர். போட்டி யின் ஆட்ட நாயகனாக ஷதாப் கான் தெரிவானார். (நி)

## கல்வி முறையை...

தற்போதைய அரசாங்கம் மாண வர்களின் கல்வியைப் பாதுகாப்பதற் கும் கல்வி முறையை மேம்படுத்துவ தற்கும் உறுதிபூண்டுள்ளதாக பிரதமர் ஹரிணி அமரசூரிய நேற்று அஸ்கிரி மற்றும் மல்வத்து மகாநாயக்கர்களி டம் கூறினார்.

கண்டியில் உள்ள மல்வத்து மற்றும் அஸ்கிரி மகாநாயக்கர்களை நேற்றுச் சந்தித்த பின்னர் பிரதமர் இந்தக் கருத்தை வெளியிட்டார்.

பிரதமர் மேலும் கூறியதாவது,

புதிய தொழில்நுட்பம், டிஜிட்டல் உலகம் மற்றும் செயற்கை நுண் ணறிவு (AI) ஆகியவற்றுடன் ஒருங் கிணைக்கப்பட்ட கல்விக் கொள் கையை நோக்கி நாட்டை வழிநடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

புதிய கல்வி சீர்திருத்தத்தின்படி, தரம் 6ஆம் தரத்திற்கான புத்தகங் களை அச்சிடும் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. கல்வி முறையில் பலவீனங்கள் ஏற்படும் போதெல்லாம் அரசாங்கம் அதில் தலையிடுகிறது.

அந்தக் குறைபாடுகளைத் தடுக்க எடுக்கக்கூடிய ஒவ்வொரு நடவடிக் கையும் எடுக்கப்படுகிறது.

இலங்கையில் பாடசாலை பாடத் திட்டம் சுமார் 10 ஆண்டுகளாக புதுப் பிக்கப்படவில்லை. தற்போதுள்ள குறைபாடுகளை சரிசெய்து மிகவும் நம்பகமான கல்வியை வழங்க நட வடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

புதிய அரசாங்கமாக, தற்போதுள்ள அரசியல் மற்றும் சமூக சூழ்நிலையை மாற்றுவதற்கான பொறுப்பை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம், மேலும் தடை களுக்கு மத்தியில் கல்வியை நம்பக மான சூழ்நிலையை நோக்கி வழி நடத்த நடவடிக்கை எடுத்து வருகிறோம். புத்தகங்களை அச்சிடும் போது ஏற்பட்ட பிரச்சினை குறித்து பல துறைகள் மூலம் சுயாதீன விசா ரணை நடத்தப்படும் என்றும் அவர் கூறினார். (ம-7)

## கடற்படையின்...

நடைபெற்ற பாதுகாப்பு அமைச்சின் கூட்டத்திலேயே இவ்வாறு தெரிவித் தார்.

குறித்த கூட்டத்தில், கடற்படை யினரின் ஆக்கிரமிப்பிலுள்ள மன் னார் - சிலாவத்துறை பிரதேச செய லாளர் பிரிவிற்குட்பட்ட முள்ளிக்குளம் கிராமத்தினை விடுவிப்புச் செய்வது டன், தமது பூர்வீக வாழ்விடங்களில் மீள்குடியமர்வதற்கு காத்திருக்கும் முள்ளிக்குளம் கிராமமக்களை மீள் குடியமர்த்துவதற்கும் நடவடிக்கை களை மேற்கொள்ளுமாறு வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவிடம் வலி யுறுத்தினார்.

இந்நிலையில் முள்ளிக்குளத்தில் கடற்படையின் ஆக்கிரமிப்பிலுள்ள மக்களின் காணிகளை விடுவிப் பதற்கு கடற்படை இணக்கம் தெரிவித் துள்ளது. அத்தோடு எதிர்வரும் 15ஆம் திகதி தாம் மன்னாருக்கு வருகைதரும்போது குறித்த முள் ளிக்குளம் காணி விடுவிப்பு தொடர் பிலும் கலந்துரையாடவுள்ளதாக ஜனாதிபதியால் பதில் வழங்கப்பட் டது.

மேலும் இதுதொடர்பில் பாராளு மன்ற உறுப்பினர் ரவிகரன் ஊடகங் களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில்,

மன்னார் - சிலாவத்துறை பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட முள்ளிக் குளம் கிராமம் மீள்குடியமர்த்தப்பட வேண்டுமென ஜனாதிபதியிடம் வலி யுறுத்தியுள்ளேன்.

அத்தோடு முள்ளிக்குளம் மக் களின் நிலைமைகள் தொடர்பிலும் இதன்போது தெளிவுபடுத்தினேன். அந்தவகையில் முள்ளிக்குளம் கிரா மத்தில் வாழ்ந்த 400 வரையான குடும் பங்கள் கடந்த 1990ஆம் ஆண்டு தமது சொந்த இடங்களிலிருந்து இடம்பெயர்ந்தனர் என்பதையும், அதன்பின்னர் கடந்த 2002ஆம் ஆண்டு 300 வரையான குடும்பங்கள் மீண்டும் தமது சொந்த இடங்களில் மீளக்குடியேறியதுடன், அதில் 150 வரையான குடும்பங்களுக்கு வீடு களும் அமைத்துக் கொடுக்கப்பட்டி ருந்தன என்பதையும் ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டுவந்துள்ளேன்.

இதேவேளை அசாதாரண சூழ் நிலை காரணமாக மீண்டும் கடந்த 2007ஆம் ஆண்டு முள்ளிக்குளம் கிராம மக்கள் மீளவும் தமது பூர்வீக வாழ்விடத்திலிருந்து இடம்பெயர்ந்த போதிலும் இதுவரை அந்த மக்கள் மீளக்குடியமர்த்தப்படவில்லை என் பதையும் ஜனாதிபதியின் கவனத் திற்குக் கொண்டுவந்திருந்தேன் என் றார். (ம-7,299)

## ஆழ்ந்த...

அவர் நேற்று மாலை வெளியிட் டுள்ள பதிவில் மேலும் குறிப்பிடுகை யில்,

ஆழ்ந்த காற்றமுத்த தாழ்வு மண்ட லம் தொடர்ச்சியாக வடமேற்கு திசை நோக்கி நகர்ந்து வருகின்றது.

ஆரம்பத்தில் மாதிரிகளிடையே அதன் நகர்வுப் பாதை தொடர்பில் ஒருமித்த கருத்து காணப்பட்டது. ஆனால் தற்போது மாதிரிகள் இரண்டு வகையான நகர்வுப்பாதைகளைக் காட்டுகின்றது.

**நகர்வு 1:** ஏற்கெனவே இருந்தது போன்று இலங்கையின் கிழக்கு கரையை அண்மித்து பின் வடக்கு திசை நோக்கி நகர்ந்து, அதன் பின் னர் எதிர்வரும் 10 ஆம் திகதி மாலை மன்னார் வளைகுடா கடற்பகுதிக்குள் பிரவேசித்தல்.

**நகர்வு 2:** இலங்கையின் கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்புக்கும் அம்பாந்தோட்டைக்கும் இடையில் நிலப்பகுதிக்குள் நாளை (இன்று) இரவு அல்லது 10ஆம் திகதி அதி காலை பிரவேசித்தல்.

நகர்வு 1 இன் ஊடாக பயணித் தால் வடக்கு மாகாணம் நான் முன் னரே குறிப்பிட்டபடி எதிர்வரும் 12.01.2026 வரை மிக மிக கனமழையைப் பெறும் (04 நாள் திரட்டிய மழை வீழ்ச்சி 600 மி.மீ. இனை விட அதிகம்).

நகர்வு 2 இன் ஊடாக பயணித் தாலும் வடக்கு மாகாணம் கனமான மழை வீழ்ச்சியைப் பெறும். ஆனால் கிழக்கு மாகாணம் எதிர்வரும் 13.01.2026 வரை 350 மி.மீ.இனை விட கூடுத லான திரட்டிய மழைவீழ்ச்சியைப் பெறும்.

நகர்வு 2 இன் படி இந்த ஆழ்ந்த காற்றமுத்த தாழ்வு மண்டலம் நகர்ந் தால் மத்திய மாகாணம் ஊவா மாகா ணம் என்பன 300 மி.மீ. இனை விட கூடுதலாக திரட்டிய மழைவீழ்ச்சி யைப் பெறும்.

ஆனால் நகர்வு ஒன்றினை விட நகர்வு 2 இலங்கைக்கு குறிப்பாக கிழக்கு, ஊவா, மத்திய சப்ரகமுவா, வட மத்திய, வடமேல் மற்றும் தென் மாகாணங்களுக்கு மீளவும் பாதிப்பை ஏற்படுத்தும்.

நகர்வு 2 இன் மையப் பகுதியாக மத்திய, ஊவா மற்றும் சப்ரகமுவா மாகாணங்கள் அமையும் என்பத னால் மேற்குறிப்பிட்ட மாகாணங் களில் குறிப்பாக கண்டி, மாத்தளை, நுவரெலியா, பதுளை, கேகாலை, குருநாகல் மாவட்டங்களில் நிலச்சரிவு நிகழ்வுகளுக்கான அதிகூடிய வாய்ப் புகள் உள்ளன.


ஆனால் இந்த நிகழ்வின் நகர்வு பற்றிய இறுதி முடிவை நாளை (இன்று) காலையே தீர்மானிக்க முடியும்.

நகர்வு 2 உறுதியானால் மீளவும் மலையகத்தின் பல பகுதிகள் நிலச் சரிவு அபாயத்தை எதிர்கொள்ளும். ஆகவே இது தொடர்பாக மிக மிக முன்னெச்சரிக்கையாகவும் விழிப்பாக வும் இருக்க வேண்டும் என்றார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சடுதியாக அதிகரிக்கும் டெங்கு பரவல்

## ஒரு வாரத்திற்குள் 1,500 இற்கும் மேற்பட்டோர் பாதிப்பு



**(கொழும்பு) ........................................**

**நாடு முழுவதும் டெங்கு காய்ச்சல் பரவல் அபாய கரமான நிலையை எட்டியுள்ளது. 2026 ஆம் ஆண்டின் முதல் ஆறு நாட்களில் மட்டும் 1,598 டெங்கு நோயாளிகள் பதிவாகியுள்ளனர். இது நாளொன் றுக்கு சராசரியாக 250இற்கும் மேற்பட்ட பாதிப்புகள் பதிவாகி வருவதைக் காட்டுகிறது.**

இது குறித்து கருத்து தெரி வித்துள்ள சமூகநல மருத்துவ நிபுணர் பிரஷிலா சமரவீர, சூறா வளியைத் தொடர்ந்து தற்காலிக முகாம்களில் புகை விசிறல் மற்றும் முறையான கழிவு மேலாண்மைப் பணிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ள தாகத் தெரிவித்தார்.

மேலும், காய்ச்சல் அறிகுறி கள் தென்பட்டால் நோயாளிகள் தாமாகவே மருந்துகளை உட்கொள்வதைத் தவிர்க்க வேண்டும் என்றும், காய்ச்சல் இரண்டு நாட்களுக்கு மேல் நீடித்தால் உடனடியாகத் தகுதிவாய்ந்த மருத்துவரை அணுகி சிகிச்சை பெற வேண் டும் என்றும் அவர் எச்சரித் துள்ளார்.

சிகிச்சையில் ஏற்படும் தாமதம் உயிருக்கு ஆபத்தாக முடியலாம் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவின் தகவல்படி, கொழும்பு, கம்பஹா மற்றும் களுத்துறை உள்ளிட்ட மேல் மாகாண மாவட் டங்களிலேயே அதிகப்படியான பாதிப்புகள் பதிவாகியுள்ளன.

அத்துடன், யாழ்ப்பாணம் கண்டி, காலி, மட்டக்களப்பு மற்றும் இரத்தினபுரி போன்ற மாவட்டங்களிலும் டெங்கு பர வல் தீவிரமடைந்துள்ளது. (நி)


# சேவை நலன் பாராட்டு

திருமதி. இளந்திரை புஸ்பராஜா - SLTS-I

பகுதித் தலைவர், தரம் - 06, 07




**சேவை விபரம்**

- யா/கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி 17.08.1988 - 28.02.1992
- யா/பலாலி ஆசிரியர் கலாசாலை 01.03.1992 -31.12.1993
- யா/அல்லாரை அரசினர் தமிழ் வித்தியாலயம் 01.01.1994 - 31.12 1994
- யா/கொடிகாமம் அரசினர் தமிழ் வித்தியாலயம் 01.01.1995 - 31.12.1999
- யா/பெரியபுலம் மகா வித்தியாலயம் 11.01.2000 - 09.05.2010
- யா/இளையதம்பி இந்து வித்தியாலயம் 10.05.2010 - 27.04.2018
- யா/யாழ். இந்து மகளிர் கல்லூரி 28.04.2018 - 08.11.2025

**எமது பாடசாலையில் 7 வருடங்கள் அரும் பணியாற்றிய ஆசிரியரின் ஓய்வுக்காலம் சிறக்க வாழ்த்துகின்றோம்**

ஆசிரியர் நலன்புரிக் கழகம்,
யா/யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி.

(C-4774)


## யோகாப் பயிற்சி ஆரம்பம்

(கரணவாய்)

பருத்தித்துறையில் 2026 ஆம் ஆண்டு க்கான யோகாப் பயிற்சி வகுப்புக்கள் ஆசிரியர் இரட்ணசோதியால் முன்னெ டுக்கப்பட்டு வருகின்றன.

பருத்தித்துறை தும்பளையில் உள்ள அஞ்சலியகத்தில் சனி, ஞாயிறு தினங்களில் காலை 6.30 மணி முதல் 7.45 மணி வரையும், பருத்தித்துறை விநாயக முதலி யார் வீதியில் உள்ள ஞானாலயத்தில் பிரதி செவ்வாய்க் கிழமை மாலை 5.30 மணி முதல் 6.45 மணி வரையும் யோகாப் பயிற்சி வகுப்புகள் இடம்பெற்று வருகின் றமை குறிப்பிடத்தக்கது. (8-60)


# வலிகாமம் வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை

## நெய்தல் முன்பள்ளியில் மாணவர்களை சேர்த்துக் கொள்வதற்கான விண்ணப்பம் கோரல்-2026

வலிகாமம் வடக்கு பிரதேச சபையால் மயிலிட்டி கிராமக்கோடு பகுதியில் நடாத்தப்படும் நெய்தல் முன்பள்ளிக்கு 2026 ஆம் ஆண்டில் புதிய மாணவர்களை இணைப்ப தற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

முன்பள்ளியில் கல்விகற்க அனுமதி பெறும் மாணவர்களுக்கு கீழ்வரும் வசதிகள் வழங்கப்படும்.

- ❖ எவ்வித கட்டணங்களும் அறவிடப்படமாட்டாது.
- ❖ தகைமை பெற்ற ஆசிரியர்களால் நவீன தொழல்நுட்ப வசதிகளுடன் கல்வி கற்பிக்கப்படுகின்றது.
- ❖ இலவச சீருடை மற்றும் சத்துணவு வசதிகள் வழங்கப்படும்.

குறித்த முன்பள்ளியில் தங்கள் பிள்ளைகளை இணைத்துக் கொள்ள விரும்பும் பெற்றோர்கள் அதற்கான விண்ணப்பப் படிவத்தை வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் தலைமை அலுவலகம், மயிலிட்டி உப அலுவலகங்களிலும் பெற்றுக்கொள்ள முடியும்.

விண்ணப்பங்களை 2026.01.30 ஆம் திகதிக்கு முன்னர் குறித்த மயிலிட்டி உப அலுவலகத்திலோ அல்லது தலைமை அலுவலகத்திலோ சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

மேலதிக தகவல்களுக்கு பின்வரும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளலாம்.

**தலைமை அலுவலகம் - 021 224 1130**
**மயிலிட்டி உப உலுவலகம் - 021 224 5230**

(C-4773)

**திரு.சோமசுந்தரம் சுகிர்தன்,**
**தவிசாளர், வலிகாமம் வடக்கு பிரதேச சபை,**
**காங்கேசன்துறை.**


# ஆதன உரிமை மாற்ற அறிவித்தல்

**வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை :பண்டத்தரிப்பு கிராம உப அலுவலகம்**
**விண்ணப்பதாரரின் பெயர் : அன்ரனி பெர்ணான்டோ லியோபெனற்**
**ஆதனப்பதிவேட்டின் படி பெயர் : சொந்தக்காரர்**

**ஆதன இல -536,538 வீதி - மாதகல் வீதி வட்டாரம் -01**

வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபையின் பண்டத்தரிப்பு கிராம உப அலுவ லகத்திற்கு உட்பட்ட வட்டாரம் 01 மாதகல் வீதியில் இவ் ஆதனம் அமைந்துள்ளது. முதலாம் ஆதனம் பிரசித்த நொத்தாரிஸ் இராசசுந்தரம் கந்தையா முகதாவில் 20227/1954.11.17ஆம் இலக்கத்தில் நிறைவேற்றிய சீதன உறுதி மூலம் நிலப்பரப்பு குளி ஒன்பது (9)ம், இரண்டாம் ஆதனம் பிரசித்த நொத்தாரிஸ் சபாபதி வைத்திலிங்கம் சோமசுந்தரம் முகதாவில் 9186/1969.03.10ஆம் இலக்கத்தில் நிறைவேற்றிய நன்கொடை உறுதி மூலம் நிலப்பரப்பு குளி ஏழு (7) ஆகும். இவ் இரண்டு ஆதனங்களும் அருகருகில் இருந்தமையினால் ஒரே ஆதனமாக வஸ்தியாம்பிள்ளை அன்னபூரணம் உரிமையாளர் ஆனார். அவர் இறக்க அவரின் ஒரே வாரிசான அன்ரனி பெர்ணான்டோ மேரிகில்டா என்பவரை தாய்வழி முதுசமாக வந்தடைந்தது. அன்ரனி பெர்ணான்டோ மேரிகில்டா 2022.12.15ஆம் திகதி இறக்க அவரின் ஒரே வாரிசான அன்ரனி பெர்ணான்டோ லியோபெனற் என்பவர் பிரசித்த நொத்தாரிஸ் திரு சி.சிவபாலசுப்பிரமணியம் அவர்கள் முகதாவில் 2134/2025.02.27 இலக்க அத்தாட்சிப்படுத்திய பிரகடன உறுதி மூலம் தமக்கே சொந்தமென வெளிப்படுத்தி உள்ளார்.

மேலும் குறித்த ஆதனத்தில் தனது ஆட்சியிலுள்ள பாகமான ஆதனம் தொடர்பில் உத்தரவு பெற்ற நில அளவையாளர் A.சந்தியாபிள்ளை அவர்களால் அளந்து வரைந்த 3189ஆம் இலக்க 18.01.2023 ஆம் திகதிய நில அளவைப்படத்தில் நிலப்பரப்பு குளி 15.89 ஆக காட்டப்படுகின்றது.

**ஆதன விபரம்**

வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் வலிதென்மேற்குப் பிரதேச சபை பண்டத்தரிப்பு கோவிற்பற்று மாதகலிறை J/152இல் நிலப்பரப்பு குளி பதினைந்து தசம் எட்டு ஒன்பது (15.89) ஆகும்

இதன் எல்லைகள்
கிழக்கு - LSP அமலநாத் டொலர்றோஸ் டைசி
வடக்கு:- விக்கினேஸ்வர வீதி
மேற்கு:- பிரதான வீதி

மேற்குறித்த ஆதனத்தை அன்ரனி பெர்ணான்டோ லியோபெனற் என்பவர் 2134/27.02.2023 ஆம் இலக்க பிரகடன உறுதி மூலம் சொந்தமென வெளிப்படுத்தி உள்ளார். அன்ரனி பெர்ணான்டோ லியோபெனற் என்பவர் வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் பண்டத்தரிப்பு கிராம உப அலுவலகத்தின் ஆதனப்பதிவேடுகளில் பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித் துள்ளார். மேற்படி ஆதன உரிமை மாற்றம் செய்வது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து 30 நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ ஆட்சேப னையைத் தெரிவிக்குமாறும் ஆட்சேபனை தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் அன்ரனி பெர்ணான்டோ லியோபெனற் என்பவரின் பெயருக்கு ஆதன உரிமை மாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் இந்த ஆதன உரிமை மாற்றம் செய்வதால் ஏற்படக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**க.யெசீதன், தவிசாளர்**
**வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை,**
**மானிப்பாய்.**

(6521)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வட இலங்கை சங்கீத சபையில்
# சற்குரு ஸ்ரீ தியாகராஜ சுவாமிகளின் 179 ஆவது இசை ஆராதனை

(யாழ்ப்பாணம்)

வட இலங்கை சங்கீத சபை வழங்கும் சற்குரு ஸ்ரீ தியாகராஜ சுவாமிகளின் 179 ஆவது இசை ஆராதனை இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிமுதல் மதியம் 12.30 மணிவரை வட இலங்கை சங்கீத சபை கலையரங்கில் இடம்பெறவுள்ளது.

யாழ். வலயக்கல்விப் பணிப்பாளரும் வட இலங்கை சங்கீத சபைத் தலைவருமான திருமதி. மாலதி முகுந்தன் தலைமையில் இடம்பெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் என். சண்முகலிங்கன் அவர்களும் சிறப்பு விருந்தினராக யாழ். பல்கலைக் கழக இசைத்துறை வருகை விரிவுரையாளர் கலைப் பிரவாகம் பொன். ஸ்ரீ வாமதேவன் அவர்களும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (8)

## ஏலவிற்பனை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றத்தில் எதிர்வரும் 14.01.2026 ஆம் திகதியன்று காலை 8 மணிக்கு தண்ணீர் மோட்டார்கள், Generator, Rice cooker, துவிச்சக்கர வண்டிகள், செப்பு, இரும்பு பைப் மற்றும் காஸ் சிலிண்டர் என்பனவும் 17.01.2026 ஆம் திகதியன்று காலை 9.30 மணிக்கு மோட்டார் வாகனங்கள், மோட்டார் சைக்கிள்கள் மற்றும் லான் மாஸ்டர் என்பனவும் ஏல விற்பனை செய்யப்படும் என பதிவாளர் அறிவித்துள்ளார். (8)

# கலை விழா

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் குருபூசை தினத்தின் தொடர்ச்சியாக அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலைவிழா எதிர்வரும் 11.01.2026 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் இணைப்பாளர் கலாநிதி. பா. காசிநாதன் தலைமையில் நீராவியடியில் அமைந்துள்ள நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் இடம்பெறும்.

நாவலர் குருபூசை தினத்தின் சார்பாக பாடசாலை மாணவர்களுக்கிடையில் நடைபெற்ற பேச்சு மற்றும் கட்டுரைப் போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கான பரிசில்கள் வழங்கும் நிகழ்வும். இடம்பெறவுள்ளது. சமய ஆர்வலர்கள் வருகை தந்து விழாவினை சிறப்பிக்குமாறு யாழ்ப்பாணம் சைவபரி பாலனசபை செயலாளர் அறிவித்துள்ளார். (8)

# சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் கடன் வழங்கும் வேலைத்திட்டம்




(சங்கானை)

சங்கானை பிரதேச செயலகத்திற்குட்பட்ட சமுர்த்திப் பிரிவின் ஒன்றிணைந்த வேலைத்திட்ட நடவடிக்கையின் அடிப்படையில் சங்கானை சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிச் சங்கத்தினால் வட்டுக் கோட்டை சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கியின் வலயத்திற்குட்பட்ட J/162, அராலி தெற்கு கிராம உத்தியோகத்தர் பிரிவைச் சேர்ந்த பயனாளி ஒருவருக்கு கடற்றொழிலை விருத்தி செய்யும் வகையில் 15 இலட்சம் ரூபா கடன் வழங்கும் வேலைத்திட்டம், வட்டுக் கோட்டை சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கியில் கடந்த 1 ஆம் திகதி வியாழக்கிழமை இடம்பெற்றது.

இந்நிகழ்வில் சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிச் சங்க முகாமையாளர், கருத்திட்ட முகாமையாளர், வட்டுக் கோட்டை சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கியின் முகாமையாளர், வலய உதவியாளர், பிரிவு சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் எனப்பலரும் கலந்து கொண்டனர். (8)

## வலிகாமம் கிழக்கு பிரதேச சபையால்
# நிலாவரையில் சிரமதானம்



(யாழ்ப்பாணம்)

நிலாவரைக் கிணறு அமைந்துள்ள பகுதி மிகவும் துாய்மையற்றதாகக் காணப்பட்ட நிலையில் வலிகாமம் கிழக்கு பிரதேச சபையால் நேற்று முன்தினம் புதன்கிழமை சிரமதானப்பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

நிகழ்வில், வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ், சபை உறுப்பினரும் குழுத் தலைவருமான அ. கமலரேகன், பணியாளர்கள், பிரதேச மக்கள் ஆகியோர் இணைந்து குறித்த பகுதியை துப்பரவு செய்யும் பணியில் ஈடுபட்டனர்.

சபையின் சொத்தாக உடைவடைந்த நிலையில் உள்ள இருக்கைகள், நுழைவாயில் கதவு போன்றன திருத்தங்களுக்கு உள்ளாக்கப்பட்டு வர்ணம் தீட்டப்பட்டுள்ளது. பெயர்ப் பலகையிடப்பட்டுள்ள துடன் பொலித்தீன் தடை மற்றும் துாய்மையினை பேணுவதற்கான விளம்பர பலகைகளும் பிரதேச சபையினால் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (8)

# ரயில் விபத்தை தடுத்துநிறுத்திய முச்சக்கரவண்டி சாரதிகள்
## மீசாலையில் சம்பவம்

(அராலி)


மீசாலைச் சந்தியிலுள்ள புகையிரதக் கடவையில் ஏற்பட விருந்த விபத்து முச்சக்கர வண்டி சாரதிகளால் முறியடிக்கப்பட்டுள்ளது.

இச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருகையில்,

குறித்த பகுதியில் ரயில் வந்து கொண்டிருக்கும்போது கூலர் வாகனமொன்று புகையிரதக் கடவையை கடக்க முற்பட்டுள்ளது. இதனை அவதானித்த மீசாலை தரிப்பிடத்தில் நின்ற முச்சக்கர வண்டிச் சாரதிகள் உடனடியாக செயற்பட்டு கூலர் வாகனத்தை நிறுத்தியுள்ளனர்.

இதனால் அங்கு ஏற்படவிருந்த விபத்து தவிர்க்கப்பட்டுள்ளது. குறித்த புகையிரதக் கடவை ஒரு வார காலமாக இயங்காத நிலையில் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (8-104)

# கசிப்பு உற்பத்தியை நிறுத்துங்கள் மீறினால் கடும் நடவடிக்கை



(மன்னார்)

மன்னார் மடு பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட சில கிராமங்களில் கசிப்பு விற்பனை அதிகளவில் இடம்பெற்று வருகிறது.

இதனால் சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை பாதிக்கப்பட்டுள்ள நிலையில் இது தொடர்பாக நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் தொடர்ந்து கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

இந்த நிலையில் மடு பெரிய பண்டிவிரிச்சான் பகுதியில் கசிப்பு உற்பத்தி செய்வதோ அல்லது விற்பனை செய்வதோ உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். மீறுபவர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என கசிப்பு உற்பத்தியாளர்கள் மற்றும் விற்பனையாளர்களுக்கு எச்சரிக்கை விடுத்து சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன. (8)

## சந்தைகளில் நேற்றைய விலை

பொருளாதார மத்திய நிலையம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மட்டுவில் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 300 | 700 | 400 | 450 | 400 |
| உருளைக்கிழங்கு | 200 | 180 | 160 | 200 | -- |
| பச்சைமிளகாய் | 1000 | 1300 | 800 | 1000 | 1000 |
| தக்காளி | 600 | 500 | 600 | 600 | 500 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 200 | 200 | 150 | 200 |
| கோவா | 300 | 300 | 300 | 300 | 250 |
| கரட் | 400 | 550 | 600 | 600 | 500 |
| பூசணி | 160 | 180 | 120 | 200 | -- |
| புடோல் | 300 | 350 | 300 | 250 | 300 |
| வாழைக்காய் | 150 | 130 | 100 | 200 | 120 |
| சின்ன வெங்காயம் | 300 | 250 | 300 | 400 | 200 |
| பெரிய வெங்காயம் | 250 | 240 | 180 | 200 | 150 |
| பாகற்காய் | 600 | 700 | 500 | 1000 | 600 |
| வெண்டக்காய் | 400 | 300 | 300 | 400 | 300 |
| கருணைக் கிழங்கு | 200 | 260 | 150 | 320 | -- |
| பயற்றங்காய் | 350 | 600 | 400 | 500 | 500 |
| லீக்ஸ் | 400 | 550 | 600 | 600 | -- |
| பீற்றூட் | 800 | 500 | 1000 | 1200 | 1000 |
| கறிமிளகாய் | 800 | 900 | 800 | 1000 | 800 |
| முருங்கைக்காய் | -- | -- | 2000 | -- | -- |
| போஞ்சி | 500 | 550 | 800 | 600 | 450 |
| கத்தரிதம்புள்ள | 250 | 450 | 400 | 400 | -- |
| கீரை – 1 பிடி | 100 | 60- 140 | 250 | 150 | -- |
| தேசிக்காய் | 400 | 350 | 300 | 200 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 130 | 200 | 150 | 120-170 | -- |
| இராசவள்ளி | 600 | 600 | 500 | 500 | -- |
| வெங்காயப்பூ | 800 | 600 | 1000 | 800 | -- |
| முள்ளங்கி | 200 | 150 | 200 | 300 | 300 |
| பொன்னாங்காணி | 100 | 100 | 150 | 80 | -- |
| வல்லாரை | 80 | 70 | 100 | 100 | -- |
| ஈரப்பலா | 100 | 150 | 100 | 150 | -- |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதுபோதையில் சாரத்தியம்; சட்ட நடவடிக்கைகள் ஆரம்பம்

## அமைச்சர் பிமல் பாராளுமன்றில் தெரிவிப்பு



(கொழும்பு)

மது அருந்திவிட்டு வாகனங்கள் செலுத்துபவர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

பிற போதைப்பொருட்கள் பாவனையில் ஈடுபட்டு வாகனங்களை செலுத்தும் சாரதிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கும் செயற்பாடு நேற்று முதல் ஆரம்பமாக உள்ள தென அவர் பாராளுமன்றத்தில் குறிப்பிட்டார்.

விதிமுறைகள் இல்லாததால் சட்ட நடவடிக்கைகளை அமுல்படுத்துவது இதுவரை கடினமாக இருந்து வந்துள்ளது.

மூன்று முதல் நான்கு நிமிடங்களுக்குள் 12 வகையான போதைப்பொருள் பாவனையை கண்டறியும் திறன் கொண்ட நடமாடும் ஆய்வகங்களை அமைக்கும் திறன் எம்மிடம் உண்டு.

இதனால் பரிசோதனை முடிவுகளை அச்சிட்டு நேரடியாக சாரதிகளுக்கு வழங்க முடியும் என்றும் போக்குவரத்து அமைச்சர் மேலும் தெரிவித்தார். (நி)


## இந்திய சாஸ்திரியார் வருகை

சிங்கப்பூர், மலேசியா மற்றும் பல நாடுகளில் புகழ் ஓம் சக்தி அருள்வாக்கு பெற்ற **இரத்தினசாமி** சாஸ்திரியார் அவர்கள் யாழ் வருகை. ஜாதகம், கைரேகை, எண் கணிதம் மற்றும் தொழில் முன்னேற்றம் இன்மை, புதிய தொழில் தொடங்க, திருமணத்தடை, வாழ்வில் தோல்வி, குடும்பத்தில் பிரச்சினை வெளிநாடு செல்ல தடை, கல்வியில் தடை, குழந்தை பாக்கியம் மற்றும் எந்த பிரச்சினைக்கும் நேரில்.

தொடர்புகளுக்கு- **076 682 7368**

**யாழ் கச்சேரிக்கு அருகாமையில், சுண்டுக்குளி**

**(முன்பதிவு செய்து வரவும்)**

(C-4772)



# யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தக கண்காட்சி-2026

## வட இலங்கையின் முதன்மையான மாபெரும் வர்த்தகக் கண்காட்சி

**காட்சிக்கூடங்களை உடனடியாக பதிவு செய்வதன் மூலம் தங்கள் வர்த்தகங்களை சர்வதேச தரத்திற்கு கொண்டு செல்வதற்கான அத்திவாரத்தினை இட்டுக் கொள்ளுங்கள்.**

16 ஆவது யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தக கண்காட்சியானது (JITF) 2026 ஆம் ஆண்டு ஜனவரி 23-25 வரை யாழ்ப்பாண முற்றவெளி மைதானத்தில் நடைபெற உள்ளது. இது வட இலங்கையின் மிகப்பெரிய வருடாந்த வர்த்தக திருவிழாவாக விளங்குகின்றது.

**யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தக கண்காட்சியின் சிறப்பம்சங்கள்**

- ✓ கட்டிடம், வாகனத் தொழில், வேளாண்மை, சுகாதாரம், உணவு, உற்பத்திகள், பானங்கள், கணணி மற்றும் தொடர்பாடல் உள்ளிட்ட பல துறைகளில் இருந்து 400 இற்கு மேற்பட்ட காட்சிக்கூடங்கள்.
- ✓ கடந்த ஆண்டில் 70,000 இற்கும் மேற்பட்ட பார்வையாளர்கள் மற்றும் 5,000+ வணிக பிரதிநிதிகள் என்ற அடிப்படையில் பல்லாயிரக்கணக்கான நுகர்வோர் மற்றும் பார்வையாளர்களின் வருகை.
- ✓ நேரடி வணிக இணைப்புகள் (Business Matchmaking) - வணிக பிரதிநிதிகள் மற்றும் பார்வையாளர்களில் 70% பேர் வியாபார கூட்டாண்மைகளுக்கு வழிவகுக்கும் வணிக தொடர்புகள்

**யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தக கண்காட்சி- சர்வதேச தரத்திலான உங்கள் வர்த்தக வளர்ச்சிக்கான நுழைவாயில்...**

புதிய தயாரிப்புகளை அறிமுகப்படுத்த, வியாபார கூட்டாளர்களை அடையாளம் காண, ஏற்றுமதி வாய்ப்புகளை பெற்றுக்கொள்ள விரும்பும் உங்களுக்கான கண்காட்சி.

**23-25 ஜனவரி 2026**
**காலை 10.00 முதல் இரவு 8.00 வரை**
**முற்றவெளி மைதானம், யாழ்ப்பாணம்**

காட்சிக்கூட முன்பதிவு மற்றும் தகவல்களுக்கு:

**யாழ்ப்பாணம் வர்த்தக தொழிற்துறை மன்றத்துடன் (CCIY) தொடர்பு கொள்ளுங்கள்.**

**Chamber of Commerce and Industries of Yarlpanam**
**No-63- Nallur Cross Road, Nallur, Jaffna.**
**info@cciy.lk**
**021 222 6609/ 070 366 3603**

CCIY Unity is Strength

LECS LANKA EXHIBITION & CONFERENCE SERVICES (PVT) LIMITED





# 50 ஆவது 25 ஆவது வருட நினைவஞ்சலி

## எம்மை வாழ வைத்த தெய்வங்கள்

50 வருடம் **சவரிமுத்து மனுவேற்பிள்ளை**

மலர்வு: 02.06.1919 உதிர்வு: 09.01.1996

25 வருடம் **இசபெல்லா மனுவேற்பிள்ளை**

மலர்வு: 18.06.1914 உதிர்வு: 05.08.2000

பூமியில் உன்னதமான வாழ்க்கையை வாழ்ந்து
எம்மை வழிப்படுத்தி நெறிப்படுத்தி
உச்சம் தொட வைத்த தெய்வங்களே!
எம் காலமுள்ள காலம் வரை
உங்கள் நினைவுகள் எம்மைவிட்டு அகலாது

**அன்பிற்கு உதாரணமாய் நீங்கள் இருவரும் செய்த எல்லா நன்மைகளுக்கும் நன்றியுடன் இறைவனின் இன்ப சந்நிதியில் மகிழ்ந்திருக்க மன்றாடுகிறோம்.**

(C-4775)

**"மரியநாயகி மாளிகை"**
**நெல்லியடி, கரவெட்டி.**


தகவல்
**மனுவேற்பிள்ளை மன்மதநாயகம் (மகன்)**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதம்

# ஈரான் அரசிற்கு எதிரான போராட்டம் தீவிரம்

- இதுவரை 13 பேர் உயிரிழப்பு
- 1,200 பேர் கைது



(டெஹ்ரான்)

ஈரானில் உச்ச தலைவர் அயதுல்லா கமேனி ஆட்சிக்கு எதிரான போராட்டங்கள் தீவிரமடைந்துள்ளன. பாதுகாப்புப் படையினருக்கும், போராட்டக்காரர்களுக்கும் இடையேயான மோதல்களில், 37 பேர் உயிரிழந்துள்ளனர். 1,200இற்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேற்காசிய நாடான ஈரானில் ஏற்பட்டுள்ள கடும் பொருளாதார நெருக்கடியால், அத்தியாவசியப் பொருட்களின் விலை விண்ணை முட்டும் அளவுக்கு உயர்ந்துள்ளது.

இதேபோன்று வரலாறு காணாத வகையில், அமெரிக்க டொலருக்கு நிகரான ஈரான் கரன்சியான ரியாலின் மதிப்பும் சரிந்துள்ளது.

பொருளாதார நெருக்கடிக்கு எதிராக தலைநகர் டெஹ்ரானில் வணிகர்கள், பொதுமக்கள் போராட்டத்தை தொடங்கினர்.

இந்த போராட்டம், இப்போது உச்ச தலைவர் கமேனி ஆட்சிக்கு எதிரானதாக மாறி, நாடு முழுதும் பரவியுள்ளது.

கமேனிக்கு எதிராக முழக்கமிட்டு ஆயிரக்கணக்கானோர் வீதிகளில் இறங்கி போராடி வருகின்றனர்.

குறிப்பாக, தலைநகர் டெஹ்ரானின் பிரதான வணிக மையமான கிராண்ட் பஜாரில், நேற்று கடும் மோதல் வெடித்தது. வியாபாரிகள் கடைகளை மூடிவிட்டு போராட்டம் நடத்தினர்.

அப்போது பாதுகாப்புப் படையினர் கண்ணீர் புகைக்குண்டுகளை வீசி போராட்டக்காரர்களை கலைத்தனர். இதனால், பஜார் முழுதும் புகை மண்டலமாக காட்சியளித்தது. பலர் காயமடைந்தனர்.

கடந்த, 10 நாட்களாக நடக்கும் போராட்டங்களில், இரண்டு பொலிஸார் உட்பட 36 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

மேலும், 1,200இற்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டுள்ளனர். (நி)



# 66 சர்வதேச அமைப்ப… வெளியேறுகிறது அ…

**(வோஷிங்டன்)**

**அமெரிக்காவின் தேசிய நலன்களுக்குப் பாதிப்பு ஏற்படுத்துவதாகக் கூறி, ஐக்கிய நாடுகள் சபையின் முக்கிய பிரிவுகள் உட்பட 66 சர்வதேச அமைப்புகளிலிருந்து அமெரிக்கா உடனடியாக வெளியேறுவதாக, அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அறிவித்துள்ளார்.**


ட்ரம்பினால் வெளியிடப்பட்ட உத்தியோகப் பூர்வ அறிவிப்பின்படி,

1. ஐ.நா சார்ந்த அமைப்புகள்: ஐக்கிய நாடுகள் பெண்கள் அமைப்பு, ஐக்கிய நாடுகள் சனத்தொகை நிதியம் உள்ளிட்ட 31 ஐ.நா அமைப்புகள்.

2. ஏனைய சர்வதேச அமைப்புகள்: சர்வதேச சூரியசக்தி கூட்டணி, கொழும்புத் திட்டம் உள்ளிட்ட 35 ஐ.நா அல்லாத அமைப்புகளில் இருந்து விலகுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க வரி செலுத்துவோரின் பணம் வீணடிக்கப்படுவதாகவும், இந்த அமைப்புகளின் செயற்பாடுகள் "அமெரிக்கா முதலில்" என்ற கொள்கைக்கும் தேசிய நலனுக்கும் முரணாக இருப்பதாகவும்

# விலைக்கு வாங்கப்படவுள்ள கிரீன்லாந்து
# தீவிர ஆலோசனையில் ட்ரம்ப்



(வோஷிங்டன்)

டென்மார்க்கிற்குச் சொந்தமான தன்னாட்சி அதிகாரங்கொண்ட கிரீன்லாந்து தீவை வாங்குவது குறித்து அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மற்றும் அவரது தேசிய பாதுகாப்பு குழுவினர் தீவிரமாக ஆலோசித்து வருவதை வெள்ளை மாளிகை உறுதிப்படுத்தியுள்ளதாக வெளிநாட்டு ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

"கிரீன்லாந்தை வாங்குவது குறித்து ஜனாதிபதி ட்ரம்ப் ஆலோசித்து வருகிறார். ஆர்க்டிக் பிராந்தியத்தில் ரஷ்யா மற்றும் சீனாவின் ஆதிக்கத்தைத் தடுப்பதற்கு இது அமெரிக்காவிற்கு மிக அவசியமானது" என்று வெள்ளை மாளிகை ஊடகப் பேச்சாளர் கரோலின் லெவிட் தெரிவித்துள்ளார்.

வெனிசுவேலாவில் சமீபத்தில் அமெரிக்கா மேற்கொண்ட இராணுவ நடவடிக்கையைத் தொடர்ந்து, கிரீன்லாந்தைப் பெறுவதற்கும் இராணுவ பலத்தைப் பயன்படுத்த வாய்ப்புள்ளதா என்ற கேள்விக்கு, "அனைத்து வாய்ப்புகளும் பரிசீலனையில் உள்ளன, ஆனால் ட்ரம்பின் முதல் தேர்வு பேச்சுவார்த்தை மட்டுமே" என்று லெவிட் பதிலளித்தார்.

நேட்டோ அமைப்பில் உறுப்பினராக இருக்கும் டென்மார்க்கின் ஒரு பகுதியை அமெரிக்கா ஆக்கிரமிக்க முயல்வது அல்லது வாங்குவது சர்வதேச விதிகளை மீறும் செயல் எனப் பிரான்ஸ், பிரிட்டன், ஜேர்மனி உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகள் கூட்டாகக் கண்டனம் தெரிவித்துள்ளன.

வட அமெரிக்காவிற்கும் ஆர்க்டிக் பகுதிக்கும் இடையில் அமைந்துள்ளதால், ஏவுகணை தாக்குதல்களை முன்கூட்டியே கண்டறியும் பாதுகாப்புமையமாக இது திகழ்கிறது. அங்கு ஏற்கனவே அமெரிக்காவின் பிட்டூஃபிக் விண்வெளித்தளம் இயங்கி வருகிறது.

காலநிலை மாற்றத்தால் பனிக்கட்டிகள் உருகுவதால், அங்குள்ள அபூர்வ கனிமங்கள், யுரேனியம், இரும்பு மற்றும் எண்ணெய் வளங்களை எடுப்பது எளிதாகியுள்ளது.

ஜனாதிபதி ட்ரம்பின் இந்த அதிரடித்திட்டம் தொடர்பாக அடுத்த வாரம் அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் மார்கோ ரூபியோ, டென்மார்க் அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

## ...புகளிலிருந்து ...மெரிக்கா!



...ட்ரம்ப் சுட்டிக்காட்டியுள்ளார். குறிப்பாக, சர்வதேச நிதியுதவிகள் அமெரிக்காவின் இறையாண்மைக்கு அச்சுறுத்தலாக அமைவதை அனுமதிக்க முடியாது என அவர் வலியுறுத்தியுள்ளார்.

இந்த முடிவினால் சர்வதேச அளவில் சுகாதாரம், கல்வி மற்றும் சுற்றுச்சூழல் சார்ந்த திட்டங்களுக்கு அமெரிக்கா வழங்கி வந்த பெருமளவிலான நிதியுதவி நிறுத்தப்படும் சூழல் உருவாகியுள்ளது.

குறிப்பாக, இலங்கையைத் தலைமையகமாகக் கொண்டு செயற்படும் கொழும்புத் திட்டம் போன்ற அமைப்புகளில் அமெரிக்காவின் விலகல் ஆசிய பிராந்தியத்தில் குறிப்பிடத்தக்க மாற்றங்களை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது. (நி)

## ரஷ்யாவிலிருந்து எண்ணெய் வாங்கும் நாடுகளுக்கு 500% வரி

### சட்டமூலத்திற்கு பச்சைக்கொடி காட்டினார் ட்ரம்ப்

(மொஸ்கோ)

ரஷ்யாவிலிருந்து எண்ணெய் உள்ளிட்ட எரிசக்தி பொருட்களை வாங்கும் நாடுகள் மீதான வரிகளை குறைந்தது 500 சதவீதமாக உயர்த்த அச்சுறுத்தும் ஒரு சட்டமூலத்துக்கு அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் பச்சைக்கொடி காட்டியதாக கூறப்படுகிறது.

இந்த சட்டமூலம் அங்கீகரிக்கப்பட்டால், அமெரிக்காவின் தடைகளை மீறி ரஷ்யாவிலிருந்து எண்ணெய் வாங்கும் இந்தியா, சீனா மற்றும் பிரேசில் போன்ற நாடுகளுக்கு வரிகளால் அழுத்தம் கொடுக்கப்படும்.

செனட் சபையில் ட்ரம்பின் நெருங்கிய காங்கிரஸ் நண்பர்களில் ஒருவரான அமெரிக்க செனட்டர் லிண்ட்சே கிரஹாமின் இந்த விடயத்தை உறுதிபடுத்தினார்.

ரஷ்யாவின் உக்ரைன் படையெடுப்புடன் தொடங்கிய போரை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான ஒரு ஒப்பந்தத்துக்காக ட்ரம்ப் நிர்வாகம் தொடர்ந்தும் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றது.

இதில் அமெரிக்காவின் கடுமையான பொருளாதாரத் தடைகளின் தொகுப்பு மொஸ்கோவை பொருளாதார ரீதியாக முடக்கும் நோக்கம் கொண்டது.



இந்த நிலையில் மேற்படி புதிய சட்டமூலம் தொடர்பான தகவல் வெளியாகியுள்ளது.

இந்தச் சட்டம், ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பிற்கு சீனா, இந்தியா மற்றும் பிரேசில் போன்ற நாடுகளின் மீது மிகப்பெரிய செல்வாக்கை வழங்கும்.

மேலும், உக்ரைனில் ஜனாதிபதி விளாடிமிர் புடினின் போருக்கு நிதியளிக்கும் தள்ளுபடி செய்யப்பட்ட ரஷ்ய எண்ணெயை வாங்குவதை நிறுத்த அவர்களை ஊக்குவிக்கும் என்று தென் கரோலினா குடியரசுக் கட்சி தனது பதிவில் தெரிவித்துள்ளது. (நி)

## 700 மில்லியன் பெண்களுக்கு வங்கி கணக்குகள் இல்லை

### உலக வங்கியின் அதிரடி அறிக்கை



(வோஷிங்டன்)

உலகளாவிய நிதி நிலை குறித்த உலக வங்கியின் சமீபத்திய ஆய்வின்படி, உலகம் முழுவதும் சுமார் 700 மில்லியன் பெண்கள் இன்னும் வங்கிச் சேவைகளைப் பெற முடியாமல் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

இவர்களுக்கு வங்கிக் கணக்குகள், டிஜிற்றல் கொடுப்பனவுகள் மற்றும் ஒன்லைன் பணச் சேவைகள் எட்டாக்கனியாகவே உள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இருப்பினும், குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் கொண்ட நாடுகளில் பெண்களின் நிதி பங்களிப்பு குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

2021இல் 66 வீதமாக இருந்த பெண்களின் கணக்கு வைத்திருக்கும் விகிதம், 2024இல் 73 வீதமாக உயர்ந்துள்ளது.

டிஜிற்றல் முறையில் பணம் செலுத்தும் மற்றும் பெறும் பெண்களின் எண்ணிக்கை 50 வீதத்திலிருந்து 58 வீதமாக உயர்ந்துள்ளது.

இலங்கை தொடர்பான பாலினத் தரவு அறிக்கையின்படி, இலங்கையில் 15 வயதிற்கு மேற்பட்ட பெண்கள் மற்றும் சிறுமிகளில் 80.2 வீதம் பேர் முறையான வங்கி கணக்கு அல்லது ஒன்லைன் பணச் சேவைக் கணக்கைக் கொண்டுள்ளனர்.

இருப்பினும், 21.4 வீதமான பெண்கள் மட்டுமே வங்கி அல்லது ஒன்லைன் கணக்குகள் மூலம் பணத்தைச் சேமிக்கின்றனர்.

மொத்தமாக 35.3 வீதமான பெண்கள் ஏதோ ஒரு வகையில் பணத்தைச் சேமிக்கின்றனர். ஆனால் மாதந்தோறும் முறையாகச் சேமிப்பவர்கள் 10 வீதம் மட்டுமே என்பதுவும் கண்டறியப்பட்டுள்ளது.

பெண்கள் வங்கி கணக்கு தொடங்குவதற்குத் தடையாக இருக்கும் முக்கிய காரணிகளாக, கணக்கு தொடங்கத் தேவையான பணமின்மை, அதிகப்படியான சேவைக் கட்டணங்கள், வங்கிகள் வசிக்கும் இடத்திலிருந்து வெகு தொலைவில் இருப்பது, குடும்ப உறுப்பினர்களின் வங்கிக் கணக்கையே சார்ந்திருப்பது போன்றன காணப்படுகின்றன.

உலகளவில் கணக்கு வைத்திருக்கும் பெண்களில் பாதிக்கும் மேற்பட்டோர் கைப்பேசிகள் அல்லது அட்டைகளைப் பயன்படுத்துகின்றனர்.

குறிப்பாக, அரசு வழங்கும் மானியங்கள் அல்லது முதலாளிகள் வழங்கும் ஊதியத்தைப் பெறுவதற்காகவே 60 வீத பெண்கள் தங்களின் முதல் வங்கிக் கணக்கைத் தொடங்கியுள்ளனர்.

டிஜிற்றல் கருவிகள் பாலின இடைவெளியைக் குறைக்க உதவினாலும், ஆண்கள் மற்றும் பெண்களுக்கு இடையிலான கடன் பெறுதல் மற்றும் சேமிப்பு பழக்கத்தில் இன்னும் பெரிய இடைவெளி நிலவுவதாக உலக வங்கி சுட்டிக்காட்டியுள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குளங்களின் கீழ்ப்பகுதிகளில்
# வெள்ளம் ஏற்படும் அபாயம் அவதானமாக இருங்கள்
## முல்லைத்தீவு அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்பு அலகு

(நெளுக்குளம்)

தண்ணிமுறிப்பு மற்றும் நித்தகைக் குளங்களின் கீழ்ப்பகுதிகளில் உள்ள விவசாயிகளை மிகுந்த அவதானத் துடன் செயற்படுமாறு முல்லைத்தீவு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங் கிணைப்பு அலகு அறிக்கை மூலம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

எதிர்பார்க்கப்படும் கனமழை கார ணமாக, வான்பாயும் அளவு அதிகரிக்க வாய்ப்புள்ளது. இதனால் குளங்களின் கீழ்ப்பகுதிகளில் வெள்ளம் ஏற்படும் அபாயம் காணப்படுகிறது. குறிப்பாக கழிவாறுகளுக்கு அண்மையில் மற்றும் தாழ்வான பகுதிகளில் விவசாயம் செய்பவர்கள், இந்தக் காலகட்டத்தில் நெற்பயிர் நிலங்களுக்குச் செல்ல வேண்டாம்.

தவிர்க்க முடியாத காரணங்களால் செல்ல வேண்டியிருந்தால், உயரமான பாதுகாப்பான இடங்களை முன்கூட்டியே அடையாளம் காணவும், குறைந்தது ஒரு வாரத்திற்கான உணவுப் பொருட்களை உடன் எடுத்துச் செல்லவும்.

தற்போது அனைத்துக் குளங்களும் பாதுகாப்பான நிலையில் உள்ளன. நீர்ப்பாசனத் திணைக்களம் தொடர்ச் சியாக நிலவரத்தை கண்காணித்து வருகிறது. இருப்பினும், எதிர்பாராத கனமழை ஏற்பட்டால் திடீர் வெள்ள நிரம்பல்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளது.

எனவே, பொதுமக்கள் அனைவரும் இந்த எச்சரிக்கையை கருத்தில் கொண்டு தேவையான முன்னெச்சரிக்கை நட வடிக்கைகளை மேற்கொள்ளுமாறு தெரி விக்கப்பட்டுள்ளது. (8-299)


# கல்யாணமாலை
## சர்வதேச இலவச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1994- இந்து
நட்சத்திரம்: புனர்பூசம்
8 இல் செவ்
கி-பா: 28
உயரம்: 5'11"
தகைமை/தொழில்: BSC, MSC,Civil Engineer (UK)
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/13988

பிறப்பு: 1987 - இந்து
நட்சத்திரம்:ஆயிலியம்
கி-பா: 27
உயரம்:5'7"
தகைமை/தொழில்-BA,MA, Information Asssistant (Gov)
எதிர்பார்ப்பு: உத்தியோகம்
தொ.இ: B/14962

பிறப்பு: 1992 - இந்து
நட்சத்திரம்: கார்த்திகை
கி-பா- 25 3/4
உயரம்: 5'8"
தகைமை/தொழில்:BSc, Assistant Commisioner
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/14929

பிறப்பு: 1989- இந்து
நட்சத்திரம்: உத்தரட்டாதி
கி-பா: 18
உயரம்:5'5"
தகைமை/தொழில் - A/L, Driver
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15483

பிறப்பு: 2000- இந்து
நட்சத்திரம்: புனர்பூசம்
12 இல் செவ்
உயரம்: 6'1"
தகைமை/தொழில்: BBA, UK
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15763

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1979-இந்து
நட்சத்திரம்: புனர்பூசம்
கி-பா: 56
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: Pharmacist (pvt)
எதிர்பார்ப்பு: தகுதியான ஆண்
தொ.இ: G/15587

பிறப்பு: 1989-RC
நட்சத்திரம்- அனுசம்
கி-பா-19 3/4
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: Work (Gov)
எதிர்பார்ப்பு: அரச / தனியார் உத்தியோகம்
தொ.இ: G/15580

பிறப்பு: 1998-இந்து
நட்சத்திரம்: உத்தரட்டாதி
6இல்சூரிசெவ்
உயரம்- 5'3"
தகைமை/தொழில்: Bsc, Instructor
எதிர்பார்ப்பு: உத்தியோகம்
தொ.இ: G/14438

பிறப்பு: 1996-இந்து
நட்சத்திரம்: திருவோணம்
7இல் சூரி செவ்
உயரம்: 5'4"
தகைமை/தொழில் - College, Teacher
எதிர்பார்ப்பு: உத்தியோகம்
தொ.இ: G/15454

பிறப்பு: 1995-இந்து
நட்சத்திரம்:சுவாதி
கி.பா - 24
உயரம்: 5'4"
தகைமை/தொழில் - BSC(IT), IT Analyst
எதிர்பார்ப்பு: IT Field, விவாகரத்தானவர்
தொ.இ: G/14478

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


## இன்று ஒரு தகவல் 516
தென்கச்சி கோ.சுவாமிநாதன்



# மகிழ்ச்சி இருக்கும் இடம்!

வளமான மரங்கள் நிறைந்த ஒரு காடு. அங்கே ஒரு சாது இருந்தார். எப்போதும் ஒரு மரத்தடியிலே உட்கார்ந்திருப்பார். அவருடைய இருப்பிடமே அதுதான்.

அவர் மூன்று கற்களை வைத்திருந்தார். செங்கல் மாதிரி இருக்கும். ஆனால், அதைவிடக் கொஞ்சம் பெரிதாக இருக்கும்!

எதற்கு அந்த மூன்று கல் என்றால் அதுதான் அவருடைய படுக்கை. தூங்கும் போது ஒரு கல்லை தலைக்குக் கீழே வைத்துக் கொள்வார். இன்னொரு கல்லை இடுப்புக்குக் கீழே வைப்பார். இன்னொரு கல்லை காலுக்குக் கீழே வைப்பார். உடம்பை ஒரு தகடாலே மூடிக் கொள்வார். அப்படியே தூங்கி விடுவார். மழை பெய்கிறது என்று வையுங்கள்.

அவர் உடம்பு மூன்று கல் மேலே இருக்கிறதால் அதனாலே தண்ணீர் அடியிலே ஓடிப் போயிடும். உடம்பு நனையாது. மேலே தகடு இருக்கின்றதினாலே மழையும் உடம்பிலே படாது.

அவர் தூக்கமும் கெடாது. நிம்மதியாகத் தூங்குவார். பகலிலே அந்த மூன்று கல்லையும் ஒன்று சேர ஒரு அடுப்பு மாதிரி வைத்து அதன் மேலே உட்கார்ந்து கொள்வார். அதனாலே பாம்பு, பூச்சி எதுவும் அவரைத் தொந்தரவு செய்யாது. நகர்ந்து போய்விடும்! அவர் பாட்டுக்கு நிம்மதியாக இருப்பார்.

யாராவது எதையாவது கொண்டுவந்து கொடுத்தால் வாங்கி சாப்பிடுவார். அவ்வளவுதான்!

ஒருநாள் அந்த நாட்டு அரசன் காட்டுக்கு வேட்டையாட வந்தான். அந்த வழியாக வந்தபோது இந்தச் சாது படுத்திருப்பதைப் பார்த்தான். பரிதாபப்பட்டான்

"ஐயோ பாவம் இவர், இப்படி இந்தக் கல் மேலே உடம்பை வைத்துக் கொண்டு தூங்குகிறாரே, என்ன பாடுபடுவார். இவரை நம் அரண்மனைக்கு அழைத்துக்கொண்டு போய் சுகமாக நிம்மதியாக இருப்பதற்கு வழி செய்து கொடுத்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்!" என்று நினைத்தான்.

அப்படி நினைத்துக்கொண்டே அரண்மனைக்கு வந்து விட்டான். அதன்பின் ஒரு பல்லக்கையும் இரண்டு சேவகர்களையும் காட்டுக்கு அனுப்பி வைத்தான். அந்தச் சாதுவை மெதுவாக இங்கே அழைத்துக் கொண்டு வந்துவிடுங்கள் என்று சொல்லி அனுப்பினான்.

இவர்கள் போய் அவரிடம் விபரத்தைச் சொன்னார்கள்.

"எனக்கெதற்கு அரண்மனை வாசம்?" என்றார். "இருந்தாலும் மன்னர் உத்தரவு நீங்கள் அவசியம் வர வேண்டும்!" என்றார்கள் இவர்கள்.

சரி என்று சொல்லி வேறு வழியில்லாமல் புறப்பட்டார். புறப்படும் போது மறக்காமல் அந்த மூன்று கல் ஒரு தகடு அதையும் எடுத்து பல்லக்கிலே வைத்துக் கொண்டார்.

"என்னத்திற்கு இதையெல்லாம் எடுத்து வைக்கிறார்" என்று அவர்கள் யோசனை செய்தார்கள். இருந்தாலும் அதைப் பற்றி ஒன்றும் கேட்கவில்லை பேசாமல் அவரை அழைத்துக் கொண்டு அரண்மனைக்கு வந்துவிட்டார்கள்.

அரசன் வரவேற்றான். அறுசுவை உணவு படைத்தான். அவர் படுப்பதற்குத் தங்கக் கட்டில் பட்டு மெத்தை எல்லாம் ஏற்பாடு செய்திருந்தான்.

இங்கே படுத்து ஓய்வு எடுங்கள் என்று சொல்லிவிட்டுப் போய் விட்டான். மறுநாள் காலையிலே வந்து பார்க்கிறான். சாதுபடுத்து இருக்கிறார். எப்படித் தெரியுமா? அந்தப் பட்டு மெத்தை மேலே மூன்று கல்லையும் வைத்து வழக்கம்போலவே படுத்திருக்கிறார். மேலே தகடு! அரசன் பார்த்துவிட்டு அதிர்ச்சியாகி விட்டான்.

"என்ன சுவாமி இப்படி" என்றான்

சாது சொன்னார்: "எனக்குத் தேவையும் இல்லை. குறையும் இல்லை எல்லா இடத்திலேயும் எனக்கு ஒரே மகிழ்ச்சிதான்!" என்றார்.

மகிழ்ச்சி என்பது. தங்கக் கட்டிலிலோ, பட்டு மெத்தையிலோ இல்லை. அது மனதிலே இருக்கின்ற ஒரு விடயம் "உண்மையான மகிழ்ச்சிக்கு வழி மனப்பக்குவம்" என்பது அந்த அரசனுக்குப் புரிந்ததாம்!"

இந்தக் காலத்திலே ஒரு சாமியார். அவரைத் தேடி ஒரு சீடன் வந்தான். "சுவாமி எனக்கு நிம்மதி வேண்டும். அதற்கு என்ன வழி" என்று கேட்டான்.

சாமியார் நிமிர்ந்து பார்த்தார். அதன்பின் சொன்னார். "நீ ஏகப்பட்ட பேரிடம் கடன் வாங்கியிருக்கிறாய் அதையெல்லாம் திருப்பிக் கொடுத்தால் தான், உனக்கு நிம்மதி கிடைக்கும்!" என்றார்.

இவனுக்கு ஆச்சரியம். "அது எப்படி சாமி. அவ்வளவு கரெக்டாக நான் கடன் வாங்கினதைக் கண்டுபிடித்தீர்கள்!" என்றான்.

"உனக்குக் கடன் கொடுத்து சாமியாராகப் போன எத்தனையோ பேரிலே நானும் ஒருவன் தான்டா! என்னிடமே வந்து நிம்மதிக்கு வழி கேட்கிறியே அதுதான்டா வேதனை!" என்றார் அவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### டெங்கு பரவும் சூழல்

# காணி உரிமையாளர்கள் எழுவருக்கு சிவப்பு எச்சரிக்கை

(கரணவாய்)

வல்வெட்டித்துறை நகராட்சி மன்றத்தின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் புதன் கிழமை தொண்டைமானாறு வடக்கு கிராம சேவையாளர் பிரிவில் டெங்கு ஒழிப்பு வேலைத் திட்டம் மேற் கொள்ளப் பட்டது.

பருத்தித்துறை பிரதேச செயலகத்தினர் மற்றும் பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பணி மனையினர் இணைந்து வீடுகள் தோறும் களத் தரிசிப்பை மேற்கொண்டனர்.

இதன் போது 243 ஆதனங்கள் பரிசோதிக்கப்பட்ட நிலையில் 81 இடங்கள் நுளம்பு பரவக்கூடிய சூழலாக இனங்காணப்பட்டது.

அத்துடன் 7 ஆதன உரிமையாளர்களுக்கு சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டதுடன் நுளம்பு குடம்பிகளுடன் சுற்றாடலினை பேணிய 8 குடியிருப்பாளர்களிற்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற் கொள்ளப்படவுள்ளது. (8-60)

# நீரின்று அமையாது

இயற்கையின் இனிய கொடைகளில் எல்லா உயிரினங்களும் தேடுவது நீர் ஆகும். எனவே, நீர் இன்றியமையாதது என்பதை எல்லோரும் நன்கு உணர்ந்துள்ளனர். மக்கள் வாழும் வையகம் முழுவதுமே நீரால் சூழப்பட்டுள்ளது. அது நிலத்திற்கு ஓர் அரணாகவும் விளங்கியது. நீர் ஆற்று நீர், மழை நீர், ஊற்று நீர் என மூன்று நிலைகளில் மக்களுக்குக் கிடைத்தது. இம்மூன்று வகையான நீரும் கடலில் வந்து கலப்பதால் கடல் "முந்நீர்" எனப் பெயர் பெற்றது. அரசர்கள் அமைத்த கோட்டைகளுக்கு நீர் அரணாக அகழிகள் முற்காலத்தில் அமைக்கப்பட்டிருந்தன.

மழை நீர், கடல் நீர் வெப்பத்தினால் ஆவியாகி மேலே சென்று தண்முகிலாகி மீண்டும் மழையாக மண்ணில் பொழிகிறது. ஆறு, மலை மேல் விழுந்த பனி உருகி நீராகி சமநிலம் நோக்கி வருவதாகும். ஊற்று நீர் என மழைநீர் மண்ணுக் கடியிலே தேங்கி நிற்கும். கிணற்றைக் கிண்டிப் பெறுவதாகும். இன்னும் அருவிநீர், சுனைநீர், குளத்துநீர், சேற்றுநீர், குட்டைநீர், கேணிநீர் எனப் பெறப்படும் இடங்களைப் பொறுத்து நீர் வெவ்வேறு பெயர்களாலும் இன்று அழைக்கப்படுகிறது.

நீர் இல்லாவிட்டால் இந்த வையகத்திலே பல செயற்பாடுகள் நடைபெறாது. திருக்குறளில் வள்ளுவர் அவற்றை விளக்கிக் கூறியுள்ளார். நீர் வளம் இல்லாவிட்டால் வையகத்திலே உழவுத்தொழில் நடைபெறாது. மேலும், பயிர்கள் எதுவுமே வளராது. மக்கள் வழிபாடு செய்யும் நடைமுறைகளைச் செயற்படுத்த முடியாது. தானம், தவம் என்னும் இரண்டு அறங்களும் நடைபெறாது. நெடிய கடலும் மழைநீர் இல்லாவிட்டால் தன் செயற்பாட்டைச் சரியாகச் செய்யமுடியாது.

நீர்வளம் மழையால் பொதுவாக எல்லோருக்கும் கிடைத்தாலும் ஒரு குறிப்பிட்ட காலமே மழை பெய்யும். மழை பெய்யும் பருவகாலம் "மாரிகாலம்" என அழைக்கப்படுகிறது. மழையை "மாரி" என்றும் கூறுவர். மாரிகாலத்தில் மழை அதிகமாகப் பெய்யும் போது வெள்ளப் பெருக்கும் ஏற்படுகிறது.

மேலதிகமாக வந்து சேர்ந்த நீரைக் கட்டுப்பாடு செய்ய வேண்டி ஏற்பட்டது. கரை புரண்டு ஓடும் நீர் "வெள்ளம்" எனப்பட்டது. நீரின் உயரத்திற்கு ஏற்ற நிலையிலே அந்த நீர்நிலையிலுள்ள மலர்களின் தண்டுகளும் உயரமாக வளரும். தாமரை, அல்லி, ஆம்பல், நெய்தல் போன்ற மலர் களின் நீளமான தண்டுகள் அதற்குச் சான்றாக உள்ளன. நீர் நிலைகள் மழை அதிகமாகப் பெய்யும் போது வெள்ளமாக ஓடி வரும் நீரை ஓரிடத்திலே சேமித்து வைக்க உறுதுணையாக உள்ளன. அவை கேணி, கிணறு, கூவல், துரவு, இலஞ்சி, கயம் எனப் பல்வேறு பெயர்களால் அழைக்கப்படுகின்றன.

வெப்பமான காலத்தில் மழையின்மையால் நீர் வளம் குன்றும் போது அக்காலம் "கோடை காலம்" எனப்படும். நீண்ட காலம் மழை பெய்யாவிட்டால் எல்லா உயிரினங்களுமே உணவின்றித் துன்பப்பட நேரிடும். நீர் உணவாகப் பயன் படுத்தப் படுவது ஏனைய உணவு கிடைக்காத போதும் நீரை மட்டுமே உட்கொண்டு பசியைப் போக்க முடியும். இன்னும் உணவு உண்ணும் போது ஒரு குறிப்பிட்ட அளவு நீரையும் பருக வேண்டும்.

இதனால் நீரைப் பேண வேண்டியதும் இன்றியமையாதது. அதனை வீணாக்கக் கூடாது. தூய்மையான நீரையே பருகவேண்டும். நீர் இரு வகையாக உட்கொள்ளப்படுகிறது. தண்ணீராகவும் வெந்நீராகவும் பருகலாம். குளிர்ந்த நீர் "தண்ணீர்" எனப்பட்டது. காய்ச்சிய நீர் "வெந்நீர்" எனப்பட்டது. தண்ணீர், நீராடல், தூய்மை செய்தல் என்பவற்றுக்கே பயன்படுத்தப்பட்டது. வெந்நீர் குடிநீராகப் பயன்படுத்தப்பட்டது.

"சுட்டாறிய நீர் சுகம் தரும்" என்பது முதுமொழியாகவுள்ளது. உணவு உண்பதற்கு முன்னர் உடலைத் தூய்மை செய்ய வேண்டும் என்பது நமது முன்னோர் நடைமுறையாக இருந்துள்ளது. "கூழானாலும் குளித்துக் குடி" என்னும் முதுமொழி இன்னும் வழக்கில் உள்ளது.

சுற்றுப் புறத்தைத் தூய்மையாக வைத்திருப்பதற்கும் நீர் பயன்படும். வீடு, மருத்துவமனை, கழிப்பறைகள் என்பவற்றைத் தூய்மையாக வைத்திருப்பதற்கு நீர் வேண்டும். பலர் வந்து செல்லுமிடங்களிலே நீர் தூய்மையாக இல்லாவிடின் பல்வேறு வகையான நோய்கள் தொற்றக் கூடும். வையகம் முழுவதுமே நீர் தொடர்பாகப் பல ஆய்வுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

நீர் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த 1993 ஆம் ஆண்டு மார்ச் 22 ஆம் நாள் உலக நீர் தினம் என ஐக்கிய நாடுகள் சபை அறிவித்தது.

அதனால் நீரைப் பேணுவதற்காகப் பல செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. எனினும் பண்டைய தமிழிலக்கியங்களில் நீரின் இன்றியமையாமை பல இடங்களிலே பதிவு செய்யப்பட்டுள்ளது.

**வெள்ளி நற்சிந்தனை 21**



முனைவர் ச.மனோன்மணி

# இராசிபலன்

09.01.2026
மார்கழி 25, வெள்ளிக்கிழமை
சஷ்டி முற்பகல் 11.43 மணிவரை
உத்தரம் முன்னிரவு 6.02 மணிவரை

சுபநேரம் 6.32-8.02 மணிவரை
இராகுகாலம் 11.02-12.32 மணிவரை
சித்தாமிர்தம்

சந்திராஷ்டமம்- அவிட்டம்,சதயம்.

வளவன்

**மேஷம்** வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், மற்றவர்களின் மன நிலையை அறிந்து செயற்படுவீர்கள், தொலைபேசி வழியில் கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம்.

**கடகம்** புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, வழிபாட்டால் ஆர்வம் கூடும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**துலாம்** பணப்புழக்கம் அதிகமானாலும் அடுத்தடுத்த செலவுகளால் திணறுவீர்கள், நடப்பதெல்லாம் நன்மைக்கேயென நினைக்க வேண்டிய நாள்.

**மகரம்** மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும், வரம் தரும் தெய்வங்களை வழிபடச் செல்வீர்கள், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள்.

**ரிஷபம்** பிள்ளைகளின் தேவையறிந்து பூர்த்தி செய்வீர்கள், வழிபாட்டில் ஆர்வம் கூடும், பொது வாழ்வில் பெருமை தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.

**சிம்மம்** புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும், உறவினர் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், போசன சுகமுண்டு.

**விருச்சிகம்** குடும்பத்தில் குதூகலம் கூடும், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள்.

**கும்பம்** தேக நலனில் கவனம் செலுத்தும் சூழ்நிலை ஏற்படலாம், வார்த்தைகளில் நிதானம் தேவை, நிதானத்துடன் செயற்பட்டு நிம்மதி காணவேண்டிய நாள்.

**மிதுனம்** நண்பர்கள் மத்தியில் நல்ல பெயர் கிடைக்கும், வழிபாட்டால் முன்னேற்றம் கூடும், பயணங்களின் போது பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**கன்னி** விரும்பிய உணவுப் பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், புதிய அனுபவங்கள் ஏற்படும் நாள்.

**தனுசு** பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும், கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், குடும்ப ஒற்றுமை கூடும், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள்.

**மீனம்** சொந்த பந்தங்களின் வருகையால் சிந்தை மகிழ்வீர்கள், ஆன்மிக சிந்தனை மேலோங்கும் நாள், நீண்ட நாளைய விருப்பங்கள் நிறைவேறும் வாய்ப்புண்டு.

**தவறானதைச் செய்து எவரும் பெருமையடைய முடியாது.**


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் 4

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 950





பழுவேட்டரையர் இன்னும் அதிக பரபரப்பை அடைந்து கூறினார், "நந்தினி! இது என்ன வார்த்தை? சோழ சக்கரவர்த்தியின் வேளக்காரப் படைக்கு நான் ஒரு சமயம் தலைவனாயிருந்தேன். சக்கரவர்த்தியையும் அவருடைய சந்ததிகளையும் உயிரைக் கொடுத்தேனும் பாதுகாப்பதாகச் சத்தியம் செய்திருக்கிறேன்."

"ஐயா! அந்தச் சத்தியத்தைத் தாங்கள் மீற வேண்டுமென்று நான் சொல்லவில்லையே?"

"உன்னால் கரிகாலனுக்கு ஏதேனும் தீங்கு நேர்ந்தாலும் அந்தக் குற்றம் என்னையே சாரும். 'சிறு பிள்ளையின் பரிகாசப் பேச்சைப் பொறுக்காமல் கிழவன் படுபாதகம் செய்து விட்டான்' என்று உலகம் என்னை நிந்திக்கும். ஆறு தலைமுறையாக எங்கள் குலம் சோழர்களுக்குப் பாதுகாப்பாக இருந்து எடுத்திருக்கும் நல்ல பெயர் நாசமாகும்" "அப்படியானால் தாங்கள் இந்த ஊரைவிட்டு உடனே போக வேண்டியது மிகவும் அவசியம்!" என்று நந்தினி மர்மம் நிறைந்த குரலில் கூறினாள்.

"எதனால் அவ்விதம் சொல்லுகிறாய்" என்று பழுவேட்டரையர் கேட்டார்.

"தங்களிடம் எப்படிச் சொல்வதென்று தயங்கிக் கொண்டிருந்தேன். இப்போது சொல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டு விட்டது. துர்க்கா பரமேசுவரி எனக்குச் சில அபூர்வ சக்திகளை அளித்திருக்கிறாள் இது தங்களுக்கே தெரியும்.

சுந்தர சோழர் இளம் வயதில் ஸ்திரீஹத்தி தோஷத்துக்கு உள்ளானவர் என்பதை நான் என் மந்திர சக்தியினால் அறிந்தேன். அதைத் தங்களுக்கும் நிரூபித்துக் காட்டினேன். அதே போல் ஆதித்த கரிகாலனுடைய இறுதிக் காலம் நெருங்கிக் கொண்டிருக்கிறது என் பதையும் இப்போது என் அகக் கண்ணினால் காண்கிறேன்.

அது தங்கள் கையினாலும் நேரப் போவதில்லை என் கையினாலும் நேரப் போவதில்லை. ஆனால் யமனுடைய பாசக் கயிறு அவனை நெருங்கிக் கொண்டிருக்கிறது என்பது மட்டும் நிச்சயம். காட்டிலே வேட்டையாடப் போன இடத்திலே அவனுக்கு இறுதி நேரலாம் அல்லது அரண்மனையில் படுத்திருக்கும் போதும் நேரலாம். புலி, கரடி முதலிய துஷ்ட மிருகங்களினால் நேரலாம் அல்லது அவனுடைய சிநேகிதர்கள் விடும் அம்பு தவறி விழுந்தும் அவன் சாகலாம்.

அல்லது மென்மையான பெண்ணின் கரத்திலே பிடித்த கத்தியினால் குத்தப் பட்டும் அவனுக்கு மரணம் நேரலாம். ஆனால், ஐயா, அவனுடைய மரணம் தாங்கள் கைப்பிடித்து மணந்த என்னுடைய கரத்தினால் நேராது என்று தங்களுக்குச் சத்தியம் செய்து கொடுக்கிறேன். சாலை ஓரத்திலே அநாதையாக நின்ற என்னைத் தாங்கள் உலகறிய மணந்து இளைய ராணி ஆக்கினீர்கள். அத்தகைய தங்களுக்கு என்னால் ஒரு பழியும் ஏற்படாமல் பார்த்துக் கொள்வேன்.

அதற்காகவே தாங்கள் இச் சமயம் இங்கு இருக்க வேண்டாம், போய் விடுங்கள் என்று வற்புறுத்திச் சொல்கிறேன். தாங்கள் இங்கு இருக்கும் சமயம் கரிகாலனுக்கு என்ன விதமான விபத்து நேர்ந்தாலும் உலகத்தார் தங்களை அத்துடன் சம்பந்தப்படுத்துவார்கள். அருள்மொழிவர்மனைக் கடல் கொண்டதற்கு தங்கள் மீது பழி கூறவில்லையா? அம்மாதிரி இதற்கும் தங்கள் பேரில் குற்றம் சாட்டுவார்கள்.

தொடரும்...



# சிறுவர் அரங்கம்

## நல்வழி காட்டும் பன்மொழி அறிவு



ஒருநாள் தாய் எலியும் குட்டி எலியும் தெரு ஓரமாகச் சென்று கொண்டிருந்தன. திடீரென்று அங்கு வந்த ஒரு பூனை அவற்றை விரட்டத் தொடங்கியது.

திறமைசாலியான தாய் எலி ஒரு பொந்துக்குள் நுழைந்து தப்பித்துக் கொண்டது. பூனையோ எலிக் குட்டியைத் துரத்திக் கொண்டு சென்றது.

அது பூனையின் கையில் சிக்கும் நேரம் வந்தது. "ஐயோ" என்று அலறிய அது அச்சத்தால் தன் கண்களை இறுக மூடிக் கொண்டது.

அப்பொழுது அந்தத் தெருவில் திடீரென்று நாய் குரைக்கின்ற சத்தம் கேட்டது.

அதைக் கேட்டு அஞ்சிய பூனை எலிக் குட்டியை விட்டுவிட்டு அங்கிருந்து ஓட்டம் பிடித்தது. உயிர் பிழைத்த எலிக் குட்டி சுற்றும் முற்றும் பார்த்தது.

நாய் அதன் கண்ணில் படவில்லை. சிறிது தூரத்தில் தாய் எலி நின்று கொண்டிருந்தது.

வியப்பு அடைந்த அது "அம்மா இப்போது நாய் குரைக்கும் சத்தம் கேட்டதே அது எப்படி? என்று கேட்டது.

அதற்கு அம்மா எலி நான்தான் நாயைப் போலக் கத்தினேன். அதைக் கேட்டுப் பூனை பயந்து ஓடி விட்டது.

இன்னொரு மொழியையும் தெரிந்து கொண்டதால் எவ்வளவு பயன் பார்த்தாயா என்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஞ்சி நடுங்கிக் கொண்டிருப்பவனால் சிறிய குட்டையைக்கூட கடக்க முடியாது.

~ சாணக்கியன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தமிழரசுக் கட்சியை காப்பாற்ற முடியாதா?

ஒரு பிழையைச் செய்யும்போது அதை நிவர்த்திப்பதற்கு சம்பந்தப்படவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அவ்வாறு நடவடிக்கை எடுக்காமல் கன்னை பிரிந்து பிழையை ஆதரிக்கின்ற நிலைமை ஏற்படுமாயின் அங்குதான் அழிவின் அத்தியாயம் ஆரம்பமாகிறது எனலாம்.

இதற்கு இலங்கைத் தமிழரசுக் கட்சி நல்ல உதாரணம். ஆம், தமிழரசுக் கட்சியின் தலைவராக இருந்த இரா.சம்பந்தர் அந்தக் கட்சியை தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்கான ஏற்பாடுகளைச் செய்தார்.

இதனால் பாரம்பரியமான இலங்கைத் தமிழரசுக் கட்சி தன்னிலை இழக்கலாயிற்று.

தொடர்ந்து தமிழரசுக் கட்சியின் தலைமையை மாவை. சேனாதிராஜா பொறுப்பேற்றார். எனினும் செல்வநாயகத்துக்கு ஒரு அமிர்தலிங்கம் போல மாவை. சேனாதிராஜாவுக்கு யாருமே கிடைக்கவில்லை. அவ்வாறு கிடைத்தாலும் அதை ஏற்றுக் கொள்கின்ற மனநிலையில் மாவையும் இருக்கவில்லை.

அதேநேரம் தமிழரசுக் கட்சியின் தலைவராக மாவை. சேனாதிராஜாவை நியமித்துவிட்டு, அவருக்கு உரிய இடத்தைக் கொடுக்காமல் அவரைக் கடுமையாக விமர்சிப்பதிலேயே கட்சியின் உள்ளகத் தரப்புகள் ஈடுபட்டன.

ஒரு பெரும் கட்சியின் தலைவராக ஒருவரை நியமிக்க முன்னதாக; அதுபற்றிப் பல தடவைகள் சிந்திக்க வேண்டும். நியமித்துவிட்டால், அவருக்கு உரிய இடத்தைக் கொடுப்பதும் அவரை உரியவாறு வழிப்படுத்துவதற்கான ஆலோசனைகளை வழங்குவதும் கட்சியின் நிர்வாகத்தைச் சார்ந்தது.

ஆனால் மாவையின் விடயத்தில் தமிழரசுக் கட்சி பெரும் தவறு இழைத்தது. ஊடகங்கள் வாயிலாக மாவை. சேனாதிராஜாவை மட்டம் தட்டுவதில் கவனம் செலுத்தப்பட்டதே தவிர, கட்சியைக் காப்பாற்ற வேண்டும் என்ற நினைப்பு எவரிடமும் இருக்கவில்லை.

இது தமிழரசுக் கட்சியின் பலத்தைப் பல மடங்கு குறைப்புச் செய்தது.

அதாவது முதலாவது கட்டம்; சம்பந்தர் தனது அதிகாரத்தை சர்வாதிகாரமாக்கி கட்சியைத் தனது கைக்குள் அடக்கியது.

இரண்டாவது கட்டம்; கட்சியின் தலைவராக மாவை. சேனாதிராஜாவை நியமித்துவிட்டு, அவரை ஏளனப்படுத்தியது என்ற நிலைகளால் தத்தளித்த தமிழரசுக் கட்சி, மூன்றாவது கட்டமாக; பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் - ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் ஆகியோருக்கிடையில் ஏற்பட்ட கருத்து முரண்பாடுகள் தணிப்பார் எவருமின்றி வெந்தணலாயிற்று.

உண்மையில் சிறீதரன் - சுமந்திரன் ஆய தமிழரசுக் கட்சியின் இரண்டு பலமான சக்திகள் முரண்படும்போது அதை சுமுகப்படுத்த கட்சியின் முக்கியஸ்தர்கள் முயற்சித்து அதில் வெற்றி கண்டிருக்க வேண்டும்.

ஆனால், மாப்புளிப்பது அப்பத்துக்கு நல்லது என்பதுபோல தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தர்கள் நினைத்து சிறீதரன் - சுமந்திரன் ஆகியோருக்கிடையேயான முரண்பாட்டை அண்டல் எனும் அனலால் மூட்டி, இன்று கட்சியை வெந்தணல் நிலைக்குக் கொண்டு வந்துள்ளனர்.

இப்போது கூட மேற்குறித்த இருவரிடையே ஒரு புரிதலை யாரேனும் ஏற்படுத்தினால், தமிழரசுக் கட்சியைக் காப்பாற்ற முடியும்.

# ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்கவின் படுகொலைக்கு நீதி பெற்றுக்கொடுக்கப்படும்

## பாராளுமன்றில் சபை முதல்வர் பிமல் ரத்நாயக்க

சிரேஷ்ட ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்கவின் படுகொலைக்கு நீதியை பெற்றுக் கொடுப்போம் என்று சபை முதல்வர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை (8) நடைபெற்ற அமர்வின் போது ஒழுங்குப் பிரச்சினையை முன்வைத்து உரையாற்றிய புதிய ஜனநாயக முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க,

சிரேஷ்ட ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்க படுகொலை செய்யப்பட்டு இன்றுடன் 17 ஆண்டுகள் நிறைவடைகின்றன. இந்த விடயம் தொடர்பில் பிரதமரிடம் கேள்வி கேட்பதற்கு சபாநாயகர் அலுவலகத்துக்கு விண்ணப்பித்திருந்தேன்.

லசந்த விக்கிரம துங்கவின் விவகாரம் நீதிமன்ற விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதால் அது பற்றி ஏதும் குறிப்பிட முடியாது என்று பதிலளித்துள்ளார்கள்.

இந்தப் பாராளுமன்றத்தில் நீதிமன்றத்தில் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ள பிணைமுறி மோசடி உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் , மருந்து கொள்வனவு முறைகேடு தொடர்பில் கேள்விகள் கேட்கப்படுகிறது. அதற்கும் பதில் கிடைக்கப்பெறுகிறது. ஆனால் லசந்தவின் விவகாரத்தில் பதில் இல்லை. ஏன் இரட்டை நிலைப்பாட்டை கடைப்பிடிக்கின்றீர்கள். இது கவலைக்குரியது என்றார்.

இதற்கு எழுந்து பதிலளித்த சபை முதல்வர் பிமல் ரத்நாயக்க, படுகொலை செய்யப்பட்ட லசந்த விக்கிரமதுங்க, சிரச ஊடக நிறுவனம் மீதான தாக்குதல் தொடர்பில் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரும் அமைச்சரவை பேச்சாளரும் ஓரிரு நாட்களுக்கு முன்னர் குறிப்பிட்டிருந்தனர். இந்த சம்பவங்கள் தொடர்பில் முறையான விசாரணைகளை மேற்கொண்டுள்ளோம்.

லசந்த விக்கிரமதுங்க 2008 ஆம் ஆண்டு படுகொலை செய்யப்பட்டார். இந்த படுகொலையுடன் குற்றச்சாட்டுக்கு உள்ளாக்கப்பட்டவர்களும் அப்போது எதிர்க்கட்சியில் இருந்தவர்களும் ஆட்சியில் இருந்துள்ளார்கள். படுகொலையாளிகள் அரசாங்கத்தில் இருந்துள்ளார்கள். இந்தப் படுகொலை தொடர்பில் உண்மையை நாங்கள் நிலைநாட்டுவோம் என்றார்.

(ம-7)

# புதிய அரசியலமைப்பு உருவாக்கத்தில் தமிழ் தரப்பின் பங்கேற்பு அவசியம்

## செல்வம் அடைக்கலநாதன் எம்.பி வலியுறுத்து

புதிய அரசமைப்பு உருவாக்கத்தில் தமிழ்த் தரப்புகளையும் இணைத்துக்கொள்ள வேண்டும் என்று ஜன நாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் வலியுறுத்தியுள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற கொழும்பு துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழு (திருத்தச்) சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

புதிய அரசியலமைப்பை அநுர அரசாங்கம் உருவாக்கும் போது தமிழ் தரப்பினர் இணைந்து கொள்ள வேண்டும். மேலும் மாகாண சபைத் தேர்தலை எந்த முறையில் நடத்துவது என்பது தொடர்பில் ஆராயும் குழுவை நியமிக்கும் யோசனையை அரசு முன்வைத்துள்ளது.

ஒவ்வொரு அரசுகளும் ஒவ்வொரு பிரச்சினைகளுக்கும் இது போன்ற குழுவை அமைப்பது வழக்கமானது. இவ்வாறான குழுக்களின் ஊடாக அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படுவதானது காலத்தை கடத்தும் செயற்பாடாகவே இருக்கும்.

கடந்த கால வரலாறுகளில் இதனைப் பார்த்துள்ளோம். அரசு மாகாண சபைத் தேர்தலை நடத்தும் முறை தொடர்பில் ஆராய்வதற்காக குழுவை நியமிக்க அனுமதியளித்துள்ளது.

இது எங்களுக்குச் சந்தேகங்களை ஏற்படுத்தியுள்ளது. அதாவது மாகாண சபைத் தேர்தலை காலம் கடத்துகின்ற நிலைப்பாட்டை அரசு கொண்டுள்ளதா என்ற சந்தேகத்தையே ஏற்படுத்துகின்றது.

அமைச்சர்களும் அரசும் மாகாண சபைத் தேர்தலை நடத்துவோம் என்று கூறிவந்த நிலையில் தற்போது அமைக்கப்படும் குழுவானது அந்தத் தேர்தலை காலம் கடத்துவதற்கானதா என்ற கேள்விகள் எழுகின்றன.

எவ்வாறாயினும் உடனடியாகப் பழைய முறையில் தேர்தலை நடத்தி அதன் பின்னர் என்ன செய்ய வேண்டும் என்று ஆராய வேண்டுமே தவிர, தேர்தலைப் பிற்போடுவதற்கான யுக்தியாக இவ்வாறான குழுக்களை அமைக்கும் செயற்பாடுகளை முன்னெடுத்து காலம் கடத்தும் வகையில் செயற்பட வேண்டாம் என்றார்.

(ம-7)

### பிரதமரை இழிவுபடுத்திய

# ஆசிரியருக்கு எதிராக சி.ஐ.டி யில் முறைப்பாடு

பிரதமரும் கல்வி அமைச்சருமான ஹரிணி அமரசூரியவினை இழிவுபடுத்திய ஆசிரியர் ஒருவர் தொடர்பில் குற்றப் புலனாய்வு பிரிவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கண்டியில் அமைந்துள்ள பிரபல பாடசாலையொன்றின் விஞ்ஞான பாட ஆசிரியர் ஒருவருக்கு எதிராக இவ்வாறு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மத்திய மாகாண ஆளுனரின் இணைப்பாளர் சம்பத் விக்ரமசிங்க என்பவரினால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த பாடசாலை ஆசிரியர் பிரதமரின் உருவப்படத்தை வரைந்து இட்டுள்ள குறிப்பில் மிக இழிவான சேறுபூசும் தகவல்கள் உள்ளடக்கப்பட்டதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்தப் பதிவு மூலம் பிரதமருக்கு பெரும் அவதூறு இழைக்கப்பட்டுள்ளதாக முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் மத்திய மாகாண கல்விப் பணிப்பாளர் மற்றும் ஆசிரியர் கற்பிக்கும் பாடசாலையின் அதிபர் ஆகியோருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. சம்பவம் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

(ம-7)

### ஜனவரி மாதம்

# மாணவர்களுக்கான சீருடை விநியோகம்

பாடசாலை மாணவர்களுக்கான 2026 ஆம் ஆண்டின் இலவச பாடசாலை சீருடை விநியோகத்தை இம்முறை ஜனவரி மாதத்தில் வழங்குவதற்கு கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு திட்டமிட்டுள்ளது.

அரச மற்றும் அரச அனுசரணையின் கீழ் இயங்கும் பாடசாலை மாணவர்கள் மற்றும் பிக்கு மாணவர்களுக்கும் இவ்வாறு இலவச சீருடை வழங்கப்படவுள்ளது.

சீன மக்கள் குடியரசினால் முழுமையான அன்பளிப்பாக 11.484 மில்லியன் மீற்றர் சீருடைத் துணிகள் நாட்டிற்கு வழங்கப்பட்டுள்ளதுடன், தற்போது அந்த அனைத்துத் துணிகளும் துறைமுகத்தை வந்தடைந்துள்ளன.

குறித்த சீருடைத் துணிகளை உத்தியோக பூர்வமாகப் பொறுப்பேற்கும் நிகழ்வு எதிர்வரும் ஜனவரி 13 ஆம் திகதி கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சரின் தலைமையில் நடைபெறவுள்ளது.

(ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தாண்டு பலன்கள் - 2026



**உயர்வான எண்ணம் கொண்ட கும்ப இராசியி னரே! அனுபவ அறிவால் வெற்றி பெறும் கும்ப இராசியினருக்கு 2026 ஆம் ஆண்டு மகிழ்ச்சிகரமான ஆண்டாக அமைய நல் வாழ்த்துக்கள். பொறுப்புடன் செயற்படுவீர்கள்.**

கடந்த கால கஷ்டங்கள் விலகும். எண்ணங்களில் பிரம்மாண்டம் இருக்கும். இலட்சியங்களையும் கனவுகளையும் நிறைவேற்றும் முயற்சியில் ஈடுபடுவீர்கள். வாழ்க்கை வசந்தமாக இருக்கும். திட்டமிட்ட காரியங்கள் வெற்றிகரமாக நடந்து முடியும். புகழ், அந்தஸ்து, கௌரவம் உயரும். சிந்தித்து செயற்பட்டு செல்வாக்கை உயர்த்திக் கொள்வீர்கள்.

### குருவின் சஞ்சார பலன்கள்

கும்ப இராசிக்கு 2,11 ஆம் அதிபதி யான குரு பகவான் மே மாதம் 2 ஆம் திகதி வரை பஞ்சம ஸ்தானத்திலும் ஜூன் மாதம் முதல் ருண ரோக சத்ரு ஸ்தானத்திலும் நின்று பலன் தருவார். சுமார் ஐந்து மாத காலங்களுக்கு இராசிக்கு குரு பார்வை கிடைப்பதால் சுப பலன்கள் கூடிவரும்.

திருமணம் குழந்தை பிராப்தம் போன்றவற்றில் நிலவிய தடை தாமதங்கள் அகலும். குல தெய்வ அருள் கடாட்சம் கிடைக்கும். ஆன்மீக பயணங்கள் அதிகமாக மேற்கொள்வீர்கள். அதிக சம்பளத் திற்கு ஆசைப்பட்டு வேலை மாற்றம் செய்யக் கூடாது. ஏற்றுமதி இறக்கு மதி தொழிலில் இருப்பவர்களுக்கு பல மடங்கு நன்மையான பலன்கள் நடக்கும்.

வருமானம் உயரும். விண் ணப்பித்த வீடு, வாகன கடன் கிடை க்கும். நிரந்தரமற்ற வேலையில் இருப்பவர்களுக்கு பணி நிரந்தர மாகும். வீண் அலைச்சலைத் தவிர்ப்பது நல்லது. செலவு குறை யும். சேமிப்பு உயரும். ஆரோக் கியத்தில் முன்னேற்றம் தென்படும். சில மறைமுக எதிர்ப்புகள், போட்டி களை சந்திக்க நேர்ந்தாலும் வெற்றி உறுதி. பணப்பற்றாக்குறையால் அவமா னங்களை சந்தித்த நீங்கள் பொருளாதாரத்தை பெருக்க பல புதிய வழிகளை தேர்ந்தெடுப்பீர்கள்.

தொழில் மற்றும் உத்தியோக விடயமாக குடும்பத்தை பிரிந்து செல்ல நேரும். தாயின் அன்பும் ஆதரவும் நல் ஆசியும் கிட்டும். தாயாருக்கும் இருந்த உடல் ரீதியான, மனரீதியான தொந்தரவுகள் நீங்கும்.

### சனியின் சஞ்சார பலன்கள்

இராசி அதிபதி சனி பகவான் இந்த 2026 ஆம் வருடம் முழுவதும் தனம், வாக்கு குடும்ப ஸ்தானத்தில் சஞ்சரிப்பார். இதுவரை சமுதாயத்திற்கு வெளியுலகத்திற்கு தெரியாமல் இருந்த உங்கள் திறமை பாராட்டப்படும் காலம். பல வருடங்களாக நீங்கள் எதிர்பார்த்த ஒரு அற்புத சந்தர்ப்பம் உங்களை

## திட்டமிட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும்!

தேடி வரும். அந்த வாய்ப்பு உங்க ளுக்கு பெரிய வாழ்வியல் மாற்றத்தை தரப் போகிறது. சிலர் காலத்தால் அழியாத படைப்புகளைப் படைத்து சாதனை படைப்பீர்கள். வெளிநாட்டிற்கு சென்று வருவீர்கள். அதிக அலைச்சல் இருக்கும். போட்டி பொறாமைகள் அதிகமாக இருக்கும். ஆனால் பண வரவில் தடை தாமதம் ஏற்படலாம் என்பதால் பண விடயத்தில் யாரை யும் நம்ப கூடாது. குடும்ப பிரச் சினைகள் அகலும். மனதில் நிரம்பி வழிந்த துக்கங்கள் விலகும்.

முதல் திருமணத்தில் தோல்வி அடைந்தவர்களுக்கு மறு வாழ்க்கை அமையும். கல்லூரி அரியர்ஸ் பாட த்தை எழுதி முடிக்க ஏற்ற காலம். அரசியல், ஆன்மீகம், கலை என அனைத்து துறை திறமைசாலிகளும் பிரபலமடைவார்கள். பூர்வீக சொத்து அல்லது தாய் வழி சொத்து வீடு, கட்டடம், நிலம் போன்றவற்றில் இருந்த எல்லைத் தகராறு சீராகும். பாகப் பிரிவினையால் மன சங்கடம் சீராகும். பழைய வாகனத்தை கொடுத்து புதிய வாகனம் வாங்கு வீர்கள். அந்தஸ்தை விமர்சிக்கும் விதமான விலை உய ர்ந்த பொருட் களை வாங்கி வீட்டை அழகுபடுத்து வீர்கள். நீண்ட நாட் களாக தடைப்பட்ட குல தெய்வ பிரார்த் தனையை நிறைவேற்றும் முயற்சி வெற்றி தரும்.

### ராகு கேதுவின் சஞ்சார பலன்கள்

ஆண்டின் தொடக்கத்தில் இராசியில் ராகுவும் சம சப்தம ஸ்தானத்தில் கேதுவும் நிற்கிறார்கள். டிசெம்பர் 5, 2026 முதல் 12 ஆம் இடத்தில் ராகுவும் 6 ஆம் இடத்தில் கேதுவும் சஞ்சரிப்பார்கள். இராசியில் ராகு நிற்பதால் அதிக இலாபத்திற்கு ஆசைப்பட்டு கண் இமைக்கும் நேரத் தில் தவறான தொழில் முதலீட்டில் ஈடுபட நேரும்.

சிறிய முதலீட்டில் பெரிய லாப த்தை தந்து தவறான பெரிய முத லீட்டில் வம்பு வழக்குகள் தேடி வரும். புதிய ஒப்பந்தங்களில் தொழில் தொடர்பான புதிய முயற்சிகளில் மிகுந்த கவனம் தேவை. விசுவாச மான வேலையாட்கள் உங்களை விட்டு விலகிப் போவார்கள்.

நம்பகமான வேலையாட்கள் இன்மை உங்களுக்கு நிம்மதி யின் மையை தரும். உடன் வேலை பார்ப்பவர்கள் தாங்கள் செய்த தவறை உங்கள் மேல் திருப்பி விடலாம். மேலதிகாரியிடம் அனுசரித்து செல் வதன் மூலம் பிரச்சினை இல்லாமல் இந்த காலகட்டத்தை கடக்க முடியும். வேற்று மொழி கற்கும் ஆர்வம் உண்டாகும். மாணவர்கள் நன்றாக படித்து பெற்றோர்கள் மற்றும் ஆசி ரியர்களின் நன்மதிப்பை பெறுவீர் கள். சிலர் குடியிருக்கும் வீட்டை சகாய




விலைக்கு வாங்கி மகிழ்வீர்கள். கால்நடை வளர்ப்பவர்கள் விலங்கு களை கவனமாக பராமரிக்க வேண்டும்.

### அவிட்டம் 3, 4

சுப பலன்கள் அதிகரிக்கும் வருடம். சாதிக்கும் எண்ணம் மேலோங்கும். அரசாங்கத்தால் நன்மை உண் டாகும். தொழிலில் நல்ல இலாபம் உண்டாகும். தலைமைப்பதவி தேடி வரும். பொருளாதாரத்தைப் பொறுத்த வரை இல்லை என்ற நிலை உங்க ளுக்கு இல்லை. மூத்த சகோதர, சகோதரியால் ஆதாயம் உண்டு. அனைத்து சங்கடங்களும் விலகி நன்மைகள் அதிகரிக்கும்.

வீடு மாற்றம், ஊர் மாற்றம் போன்ற நல்ல விதமான மாற்றங்கள் ஏற்படும். தொழில் முன்னேற்றம், வியாபார அபிவிருத்தி, எடுத்த காரி யத்தில் வெற்றி போன்ற நன்மைகள் நடக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி ஆனந்தம் அதிகரிக்கும். வேலைப் பளுவும் அலைச்சலும் அதிகரிக்கும்.

புதிய நட்பு வட்டாரம் உருவாகும். விலகிச் சென்ற நண்பர்கள் மீண்டும் நட்பு பாராட்டுவார்கள். பெண்களுக்கு பொன், பொருள், ஆபரண சேர்க்கை உண்டாகும். திருமணத்தடை அகன்று தகுதியான வரன்கள் வரும். உடல் நலம் மற்றும் பொருளாதார நிலை மிகச் சிறப்பாக இருக்கும். பூர்வீகம் தொடர்பான விடயங்கள் விரைவில் முடிவிற்கு வரும். ஸ்ரீல ஷ்மி நரசிம்மரை வழிபட சுப பல ன்கள் அதிகரிக்கும்.

### சதயம்

குடும்பத்தில் நிம்மதி கூடும் வருடம். இராசி அதிபதி சனி பகவான் தன ஸ்தானத்தில் தன லாபாதிபதி குருவின் பார்வை பெறுவதால் தன யோகம் சிறப்பாக அமையும். கணவன், மனைவி ஒற்றுமை, மகிழ்ச்சி கூடும். தாய், பிள்ளை உறவில் பாசமும் உற்சாகம் அதிக மாகும். நண்பர்கள், உடன் பிறந்தோர் நட்பும், நல்லுறவும் ஏற்படும். மனைவி மூலம் ஸ்திர சொத்துக்களின் சேர்க்கை உண்டாகும். பிரிந்த தம்பதிகள் சேர்ந்து வாழத் தொடங்குவார்கள்.

சிலருக்கு மறுமண யோகம் ஏற்படும். உயர் கல்வியில் மேன்மை உண்டாகும். மாணவர்களுக்கு வெற்றி நிச்சயம். விவசாய நிலத்தில் கிணறு வெட்ட நல்ல ஊற்று கிடைக்கும். அண்டை அயலாருடன் ஏற்பட்ட மனபேதம் சீராகும். பருவ வயதினருக்கு சுற்றுலா சென்று வரும் வாய்ப்பு கிடைக்கும். சிலருக்கு கடல் கடந்து வேலை செய்யும் யோகம் உண்டாகும். வம்பு, வழக்குகளில் இருந்து மீள்வீர்கள். கண், காது, மூக்கு தொடர்பான உபாதைகள் வைத்தியத்தில் சீராகும். வியாழக்கிழமை ஸ்ரீ சாய்பாபாவை வழிபடவும்.

### பூரட்டாதி 1, 2, 3

தடைகள் விலகும் வருடம். எடுக்கும் முயற்சிகளில் பழப் படியான முன்னேற்றமும் முடிவில் வெற்றி யும் உண்டாகும். உத்தி யோகத்தில் நிலவிய சங்கடங்கள் விலகும். வேலை இல்லாதவர்க ளுக்கு திறமைக்கேற்ற வேலை கிடைக்கும். தொழிலில் உண்டான நெருக்கடிகள் நீங்கும். சிலர் வியாபாரத்தை விரிவு செய்வார்கள்.

வருமானத்தில் ஏற்பட்ட தடைகள் விலகி வாழ்க்கைக்கு, ஜீவனத்திற்கு தேவையான வருவாய் கிடைக்கத் தொடங்கும். சுப கடன் வாங்கி பூமி, வீடு, வாகன, வசதியை பெருக் குவீர்கள். சௌக்கியமும், சுகமும், நோய் நிவர்த்தியும் உண்டாகும்.

இராசி அதிபதியை குரு பார்ப் பதால் கடந்த காலத்தில் நடந்த கருத்து வேறுபாடு மற்றும் மனக் கவலைகளை மறைந்து தம்பதிகள் மகிழ்ச்சியாக இல்லறம் நடத்து வார்கள். பிள்ளைகளால் பெருமை அடைவீர்கள். மாணவ, மாண விகளுக்கு படிப்பில் ஆர்வமும், அக்கறையும் கூடும். தாய்வழி உறவுகளிடம் எதிர்பார்த்த சில உதவிகள் கிடைக்கும். வியாழக் கிழமை ஸ்ரீலட்சுமி குபேரரை வழிபடவும்.

**பரிகாரம்:** ஸ்ரீ வராகி அம்மனை வழிபட வாழ்க்கையில் எந்தவித தடங்கலும் வராது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 21 பவுண்...

கள் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி வீட்டை உடைத்து தங்க நகை கொள்ளையிடப்பட்டுள்ளது.

நெல்லியடிப் பொலிஸார் இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-7,60)

## இடைநிறுத்தப்...

எதிர்வரும் 12ஆம் திகதி முதல் மீண்டும் ஆரம்பமாகும் என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் இந்திகா குமாரி லியனகே தெரிவித்துள்ளார்.

இப்பரீட்சைகள் ஜனவரி மாதம் 20ஆம் திகதி வரை நடைபெறும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கமைய 2,086 மத்திய நிலையங்களில் பரீட்சைகள் இடம்பெறவுள்ளது. (ம-7)


மஹஜன சம்பத
திகதி 2026.01.08
சீட்டிழுப்பு இலக்கம் 6068
M 3 3 9 6 7 3
அத சம்பத
M 9 6 7 3
சீட்டிழுப்பு இலக்கம் 0643
National Lotteries Board

சுப தவசக்
திகதி 2026.01.08
184
கும்பம் 28 29 62 0970

தன நிதானய
திகதி - 2026.01.08
சீட்டிழுப்பு இலக்கம் - 2098
T 27 56 66 71 T

மெகா பவர்
திகதி 08/01/2026
சீட்டிழுப்பு இலக்கம் 2416
M 14 06 36 53 58

ஜய
திகதி 2026.01.08
சீட்டிழுப்பு இலக்கம் 0336
H 6 3 4 4

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4310
சீட்டிழுப்பு திகதி | 08.01.2026
M 28 55 67 68
M
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2026.01.08
சீட்டிழுப்பு இலக்கம் 1377
சிம்மம் 07 14 48 50 சிம்மம்


## கண்டியில்...

மெகனிடுயிட்டாக உணரப்பட்டுள்ளது.

இந்த நிலநடுக்கம் லேசானது என்றும், பீதியடைய எந்தக் காரணமும் இல்லை என்றும், நிலைமை கண்காணிக்கப்பட்டு வருவதாகவும் புவியியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகம் தெரிவித்துள்ளது. (ம-7)

## 'கந்தரோடை...

ஒன்றினால் கந்தரோடை விகாரை என திசை காட்டும் பெயர்ப் பலகை நாட்டப்பட்டிருந்தது.

இந்நிலையில் கந்தரோடை விகாரைகள் அமையப்பெற்றுள்ளதாக கூறப்படும், புராதன இடத்தினை, தொல்லியல் ஆய்வு மையம் என அடையாளப்படுத்தப்பட வேண்டும் என பிரதேச சபையில் அண்மையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அதனையடுத்து குறித்த வீதியில் கந்தரோடை விகாரை என திசை காட்டும் பெயர் பலகைகளை அகற்றும் செயற்பாட்டை பிரதேச சபை முன்னெடுத்துள்ளது. அந்த வகையில் சுன்னாகம் பகுதியில் நாட்டப்பட்டிருந்த பெயர் பலகை அகற்றப்பட்டுள்ளது.

அதேவேளை, குறித்த பகுதியில் காணப்படும் சந்தைக்கட்டடம் ஒல்லாந்தர் காலத்திற்குரியதாகும். அதன் சிறப்புக்கள் தொடர்பில் மும் மொழிகளிலும் எழுதிய கல்வெட்டு அப்பகுதியில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. (ம-7,33)

## யாழ்ப்பாணம்...

மாகாணங்களின் பல பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இந்தநிலையில் ஆறுகள் மற்றும் குளங்களுக்கு அருகில் உள்ள தாழ்வான பகுதிகளில் வசிக்கும் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு நகருமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேலும் மழையுடன் கூடிய கால நிலை நிலவுவதால் இடி, மின்னல் தாக்கங்களில் இருந்து தற்காத்துக் கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

அத்துடன் வெள்ளம் தேங்கக் கூடிய வீதிகள் மற்றும் பாலங்களைப் பயன்படுத்துவதை அவசரத் தேவையின்றி தவிர்க்குமாறும் கோரப்பட்டுள்ளனர். (ம-7)

## வருடாந்த...

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய வருடாந்த திருவிழா தொடர்பான முன்னாயத்த கலந்துரையாடல் யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் நேற்றுக் காலை 09.30 மணிக்கு மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

இக் கலந்துரையாடலில் யாழ்ப்பாண மறை மாவட்ட குரு முதல்வர் ஆயர் வணக்கத்துக்குரிய அருட்தந்தை P.J. ஜெபரட்ணம், வடமாகாண கடற்படைத் தளபதி ரியல் அட்மிரல் புடிக்ஹ லியனகமகே, இந்திய துணைத் தூதரக அதிகாரி இ.நாகராஜன் ஆகியோர் பங்குபற்றினர்.

இக்கலந்துரையாடலில் தலைமையுரையாற்றிய அரசாங்க அதிபர், வரலாற்றுச் சிறப்புமிக்க கச்சதீவு புனித அந்தோனியார் திருத்தலத்தின் 2026 ஆம் ஆண்டுக்கான வருடாந்த திருவிழா எதிர்வரும் பெப்ரவரி மாதம் 27 மற்றும் 28ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளதாகத் தெரிவித்தார்.

மேலும், கச்சதீவு மனிதர்கள் இல்லாத தனித்தீவாக இருப்பதனால் சகல ஏற்பாடுகளுடன் நடப்பாண்டு திருவிழா கடந்த ஆண்டு திருவிழா ஒழுங்கமைப்பினைக் காட்டிலும் மேலும் புனிதமாக சிறப்பாக நடைபெற வேண்டும் எனவும், கடந்த ஆண்டு ஏதாவது சில குறைபாடுகள் இருப்பின் அதனை இக்கலந்துரையாடலில் தெரிவித்து, அவை குறித்து அதிக கவனம் செலுத்தி ஆக்கபூர்வமான கலந்துரையாடலாக இது அமைய வேண்டும் எனவும் தெரிவித்தார்.

மேற்படி கூட்டத்தில் பின்வரும் விடயங்கள் பிரதானமாக கலந்துரையாடப்பட்டு தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

1.இலங்கையைச் சேர்ந்த 4000 யாத்திரிகர்களும் இந்தியாவைச் சேர்ந்த 4000 யாத்திரிகர்களுக்குமென 8000 யாத்திரிகர்கள் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. அவர்களுக்கான வசதிகளை மேற்கொள்ளுதல்.

2.குறிகாட்டுவானிலிருந்து கச்சதீவிற்கு படகுச் சேவைக்கான ஒருவழிக் கட்டணமாக ரூபா 1200.00 அறவிடுவது எனவும், நெடுந்தீவிலிருந்து கச்சதீவிற்கான ஒரு வழிக்கட்டணமாக 1000.00 அறவிடுவது எனவும் தீர்மானிக்கப்பட்டது. மேலும், குறிகாட்டுவானிலிருந்து 46 தனியார் படகுகள் சேவையில் ஈடுபடும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

3.போக்குவரத்துக்காக இலங்கைபோக்குவரத்துச் சபை மற்றும் தனியார் போக்குவரத்து துறையினரின் பேருந்துக்களும் பயன்படுத்தப்படவுள்ளதாகவும் 27ஆம் திகதி காலை 4.00 மணிமுதல் பி.ப 01.00 மணி வரை யாழ்ப்பாணம் பேருந்து நிலையத்திலிருந்து பேருந்துகள் புறப்படும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

4.பக்தர்களுக்கு 28ஆம் திகதி காலை உணவு இலவசமாக வழங்கவும் தீர்மானிக்கப்பட்டது.

5. கடற்படை யினரின் ஒழுங்கமைப்பில் கச்ச தீவில் ஒரு அம்புலன்ஸ் படகும், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப் பாளர் அவர்களின் ஒழுங்கமைப்பில் 02 அம்புலன்ஸ் வண்டிகள் குறிகாட்டு வானிலும் தயார் நிலையில் இருக்கும் எனவும் தீர்மானிக்கப்பட்டது. (ம-7,104)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127



உத்தியோகபூர்வ முடிவுகள்
08.01.2026 வெற்றி வாரம் 0776
C 7 5 8 7 4 7
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.32,377,759.60
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 3042
சீட்டிழுப்பு திகதி 2026.01.08 தினம் வியாழக்கிழமை
17 45 50 68 X
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 87,928,759.20

சனிதா
திகதி 08.01.2026 வெற்றி வாரம் 5203
12 26 35 49 V
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 51,685,509.60

சசிரி
872
08.01.2026 வியாழக்கிழமை
26 35 44
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.3,736,480.00

சீட்டிழுப்பு வாரம் 4754
சீட்டிழுப்பு திகதி 08.01.2026 தினம் வியாழக்கிழமை
29 30 53 57
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.6,100,765.20

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
S 29 04 16 38 56
2218
08.01.2026 வியாழக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.618,956,321.40

ADA KOTIPATHI
வியாழக்கிழமை
வெற்றி வாரம்: 2868
சீட்டிழுப்பு திகதி: 2026.01.08
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.75,862,525.60
36 42 69 72 Q


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவை

செங்கரும்பு ,மஞ்சள் இலை,
இஞ்சி இலை மொத்தமாக
தேவைப்படுகிறது

தொடர்பு
0766457832

(C-4784)

## பெண் விற்பனையாளர் தேவை

எமது பிடவை நிறுவனத்துக்கு
அனுபவம் உள்ள அல்லது
பழக விரும்பும் sales girls தேவை.
மதிய உணவு வழங்கப்படும்

சென்னை பேஷன் வேர்ல்ட்
63, பெரிய கடை வீதி யாழ்ப்பாணம்

(6525)

## பொமிட் போட்டு தரப்படும்

கட்டிட வேலைகளுக்கு அரச
அங்கீகாரம்பெற்ற பழுப்பு நிற பூச்சு
மணல் கனரக வாகனங்களுக்கு
யாழ். மாவட்ட வீதி அனுமதிப்பத்திரம்
போட்டு தரப்படும். 35000

தொடர்புகளுக்கு:
076 324 9977

(1900)


# குவைத் பயணித்த விமானம் திருப்பி அழைப்பு ●●●●●●●

கட்டுநாயக்க விமான நிலையத்தில் இருந்து குவைத் நோக்கிப் பயணித்த ஸ்ரீ லங்கன் விமான சேவைகள் நிறுவனத்திற்குச் சொந்தமான UL-229 என்ற விமானம் இடைநடுவில் திருப்பி அழைக்கப்பட்டுள்ளது.

விமானத்தில் ஏற்பட்ட தொழிநுட்பக் கோளாறு காரணமாக குறித்த விமானம் புறப்பட்டு 2 மணித்தியாலங்கள் 21 நிமிடங்களின் பின்னர் மீண்டும் கட்டுநாயக்க விமான நிலையத்திற்கே திருப்பி அழைக்கப்பட்டுள்ளது.

குறித்த விமானம் நேற்று (08) மாலை 06.44 மணிக்கு கட்டுநாயக்க விமான நிலையத்தில் இருந்து குவைத் நோக்கிப் புறப்பட்டது.

எனினும், விமானத்தின் ஹைட்ரோலிக் அமைப்பில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறு காரணமாக, விமானி இது குறித்து கட்டுநாயக்க விமான நிலையக் கட்டுப்பாட்டு அறைக்குத் தெரியப்படுத்தியுள்ளார்.

அதனைத் தொடர்ந்து விமானத்தை மீண்டும் திருப்புமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது. (ம-7)


NORTHERN UNI
EXPERIMENT. EXPERIENCE. EXCEL

10.01.2026 OPEN DAY
POSTPONED

DUE TO ADVERSE
WEATHER CONDITIONS

NEW DATE
OPEN DAY 2026
JANUARY 17 10 AM ONWARDS ON-CAMPUS

SLIIT NORTHERN UNI,
239 Arasadi Road,
Kantharmadam Junction, Jaffna
021 7534 807

# Office Admin தேவை

அலுவலக நிர்வாகத்தில் ஓரளவு அனுபவமுள்ள Office Admin (பெண்)
தேவை.அடிப்படை கணணி அறிவும் பொறுப்புணர்வுடன் பணியாற்றக்
கூடிய திறனும் அவசியம்.வீட்டிலிருந்தும் ஏற்ற நேரத்தில் (Flexy Time)
வேலை செய்யலாம்.

சம்பளம்:- 40,000 இல் இருந்து
குடும்பப்பொறுப்பு அற்றவர்கள் விரும்பத்தக்கது.
மிகவும் அக்கறை உள்ளவர்கள் மட்டும் தொடர்புகொள்ளவும்.

076 791 0168

(6526)

# வேலையாள் தேவை

யாழ். கைதடியில் தோட்டக்காணியை பராமரிப்பதற்கு
வேலையாள் தேவை. குடும்பமாய் தங்கி நின்று
வேலை செய்யலாம்.

சம்பளம்:- 60,000 இல் இருந்து
மிகவும் ஆர்வம் உள்ளவர்கள் மட்டும் தொடர்புகொள்ளவும்.

076 791 0168

(6526)

## Divorce மாப்பிள்ளைக்கு பெண் தேவை

01.பளை, இந்து, 1994, அனுசம், Bsc, UK citizen, Divorce மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (55093)
02.வேலணை, இந்து, 1987, ஆயிலியம், IT Engineering (India), UK citizen, Divorce மாப்பிள்ளைக்கு பெண்தேவை. (53916)
03.கொக்குவில் - உடுவில், இந்து, 1988, திருவோணம், Msc, B.Eng, Civil Engineer, Australia citizen, Divorce மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (52796)
04.கைதடி, இந்து, 1994, கார்த்திகை, Hons in Physiology, canada citizen, Divorce மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (51091)
05.கொக்குவில், இந்து, 1992, அனுசம், ACCA, BBA, Bsc, LLM,Ass.Director, UK citizen, Divorce மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (34763)
06.மானிப்பாய் இந்து, 1979, கார்த்திகை, BA, Super visor, Canada citizen, Divorce மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (28457)
07.திருநெல்வேலி, இந்து, 1986, அனுசம், Business Management, Investment coordinator, Divorce மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (51412)
08.நல்லூர், இந்து, 1983, கேட்டை, Accounting Degree, Canada citizen, Divorce மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (44878)
09.மூளாய், இந்து, 1988, பரணி, Doctorate in Finance management, Bank manager & Lecture, Divorce மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (43978)
10.கொக்குவில், இந்து, 1985, ரோகிணி, Dip in International Businees, Canada citizen, Divorce மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (39467)

(C-4777)

நீங்களாகவே எமது www.thaalee.com என்கின்ற website
இல் உங்களுக்குப் பொருத்தமானவர்களைத் தெரிவு செய்து கொள்ளலாம்.
எல்லா விதமான ஜாதியிலும், Unmarried, Divorce என்பன உண்டு.

S.Sharma J.P | 077 539 3728
www.thaalee.com | 077 803 8193

## யாழ்ப்பாணத்தில் Voyzant

கனடாவை தலைமையகமாகக் கொண்ட உலகளாவிய
“வொய்சன்” நிறுவனத்தின் சேவைகள்

◆ விமான பயணச்சீட்டுக்கள் ◆ பயணக் காப்புறுதி
◆ விசா சேவைகள் ◆ வெளிநாட்டு சுற்றுலா

மேலதிக விபரங்களுக்கு: Voyzant(PVT)Ltd
No:617&619, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்.
(OLR Church இற்கு அருகில்)
077 284 9535, 021 222 6866

(6308)

# 31 ஆம் நாள் ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பு



கடந்த 11.12.2025 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்த

அமரர்

# மனோன்மணிதேவி குமாரசுவாமி

அவர்களின் சபிண்டீகரணக்கிரியைகள் நாளை (10.01.2026) சனிக்கிழமை மு.ப 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்களும் வருகை தந்து ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இவ் அழைப்பினையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்று இந்நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

பிள்ளையார் கோவில் ஒழுங்கை,
தும்பளை, பருத்தித்துறை.

குடும்பத்தினர்
076 200 3527

(C-4776)

# வட இந்திய யாத்திரை

## காசி அயோத்தி சீரடிபாபா யாத்திரை

ஆரம்பம் : 10.03.2026 நாட்கள் : 15 யாத்திரிகர்கள் : 15

தரிசிக்குமிடங்கள்

டெல்லி, அட்சயதாம். நாராயணர் கோவில், இந்திராகாந்தி வீடு, இந்தியா கேற். வேறு இடங்களும் பார்க்கலாம். ஆக்ரா, தாஜ்மகால், செங்கோட்டை, மதுரா, கிருஷ்ணஜென்ம பூமி. பிரேம்மந்திரம், அலகாபாத், கங்கா, ஜமுனா, சரஸ்வதி, திருவேணி சங்கமம், சயன ஆஞ்சனேயர், நேரு வீடு, சங்கராச்சாரியார் மண்டபம், கயா, முன்னோர்களுக்கு பிதுர்கடன் சிரார்த்தம் செய்யும் இடம், புத்தகாய, புத்தாலயங்கள். காசி விஸ்வநாதர், விசாலாட்சி, காலபைரவர் உட்பட 15 இடங்கள் தரிசனம்

மாலை 6.30 இற்கு கங்கா ஆர்த்தி பார்த்தல் காசியில் 3 நாட்கள் தங்கி சீரடி பாபா தரிசனம்,சனி சிங்கனாப்பூர், இன்னும் பல இடங்களும் போகலாம். சீத்தாமடி, சீதை பூமியுள் புதையுண்ட இடம், திரியம்பகேஸ்வரர், ஜோதிலிங்கமும் மற்றும் இராமேஸ்வரம் 21 தீர்த்தமாடல், இராமேஸ்வரலிங்க வழிபாடு (சிவதரிசனம்), நவபாஷாணம், திருப்புலானி. உத்தரகோச மங்கை பார்த்து மதுரை மீனாட்சி தரிசனம் முடித்து சென்னை வருகை.

ஒரு நாள் சென்னையில் சொப்பிங் செய்யலாம். மறுநாள் நாடு திரும்பல்

வெற்றுக்கொள்ளும் பணத்திற்கான எமது சேவைகள்

5விமானப் பயணங்கள். 3 வேளை பிராமண சமையல் ஆட்கள் சமைத்த சைவ உணவு, ரீ, கோப்பி, மினரல் வோட்டர், AC வாகன வசதி, 2 பேருக்கு கட்டில் மெத்தை, வெஸ்ரேன் கொமட், இணைந்த குளியலறை மேலும் யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு செல்லவும் பயணம் முடிய திரும்பி யாழ்ப்பாணம் வரவும் வாகன ஒழுங்கு வசதிகள் செய்து தரப்படும். மேலும் விபரங்களைக் கேட்டுப் பதிவு செய்யவும்.

விபரங்களுக்கு : கலாநிதி T.ஸ்ரீரெங்கநாதன் மகன்: ராஜன்
59, 3/6, செட்டியார் தெரு, கொழும்பு -11.
077 736 2154
E-mail - sriranganathan2601@gmail.com

(1901)


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தினரால் இல. 191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.01.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org